# சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான உரையாடல் மற்றும் நடவடிக்கையை இயக்குதல் 2022

## விடயக்கலை ஆய்வு



USAID FROM THE AMERICAN PEOPLE

Global Communities Sri Lanka

# சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான உரையாடல் மற்றும் நடவடிக்கையை இயக்குதல்

## விடயக்கலை ஆய்வு

**இலங்கை தேசிய சமாதான பேரவை**

**2022**

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான (SCORE) நடவடிக்கை**

நிதி அனுசரணை | மூலோபாயப் பங்காளர் | பிரதான நடைமுறைப்படுத்துவோர்

USAID FROM THE AMERICAN PEOPLE

Global Communities Sri Lanka

இந்த வெளியீடு ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவராண்மை வழங்கிய உதவியால் செய்யப்பட்டது. இந்த வெளியீட்டில் உள்ள கருத்துக்கள் இதன் பங்களிப்பாளர்களை சாரும் என்பதுடன் இது ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவராண்மையின் நிலைப்பாட்டையோ அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாட்டையோ வெளிப்படுத்துவதாக அமையாது.

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான**
**உரையாடல் மற்றும் நடவடிக்கையை இயக்குதல்**

ISBN 978-624-5900-07-7

முதலாம் பதிப்பு 2022

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான (SCORE) நடவடிக்கை
தேசிய சமாதானப் பேரவையினால் பிரசுரிக்கப்பட்டது: No.12/14, புரான விகாரை
கொழும்பு 06, இலங்கை
தொலைபேசி:+94 11 2818344, 2854127, 2809348
பெக்ஸ்: +94 11 2819064
மின்னஞ்சல்: npc@sltnet.lk
இணையத்தளம்: www.peace-srilanka.org

குளோபல் கொமியூனிடீஸின் (Global Communities) ஒத்துழைப்புடன்: USAID
ஸ்கோர் (SCORE) திட்டம்,18, கின்ரொஸ் அவெனியூ கொழும்பு 04, இலங்கை
இணையத்தளம்: www.globalcommunities.org

# உள்ளடக்கம்


முன்னுரை

அறிமுகம்

கதை 1 - புரிந்துகொள்வதற்காகக் கற்றல் சமூக ஒற்றுமை ஏன் முக்கியமானது

கதை 2 - "நாங்கள் சாத்தியக்கூறுகளைப் கண்டோம்...." யசோதா மகளிர் சங்கம் தன்னை மாற்றிக்கொண்டு சமூகத்தை பலப்படுத்துகிறது

கதை 3 - இளைஞர்கள் மாற்றும் மோதல்

கதை 4 - கடக்கும் எல்லைகள் சேருவில சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் மோதலுக்குப் பதிலாக ஒத்துழைப்பைத் தேர்ந்தெடுக்கின்றனர்

கதை 5 - உரையாடல், மோதல் அல்ல

கதை 6 - "வன்முறையினை நிராகரித்தல்"

கதை 7 - அன்றாட ஜனநாயகத்தைப் புரிந்துகொள்ளல்

கதை 8 - பணியில் சேவை வழங்குவதில் சமத்துவம்

# முன்னுரை

இந்த வெளியீட்டில் இடம்பெற்றுள்ள விடயக்கலை ஆய்வுகள், USAID இனால் ஆதரவளிக்கப்பட்டு 10 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட SCORE திட்டத்துடன் (Award Number - 720-383-18-CA-400003) தேசிய சமாதானப் பேரவையின் மூன்று ஆண்டு ஈடுபாட்டின் முக்கிய பகுதியாகும். தேசிய சமாதானப் பேரவையின் (NPC) தலையீடுகள் அரச அலுவலர்களுக்கான பயிற்சிகளை நடத்துவது முதல் சமூகத் தலைவர்களின் திறனை வளர்ப்பது மற்றும் சமூக ஒற்றுமைக்கு ஆதரவாக வழிகாட்டப்பட்ட தலையீடுகள் வரையிலானதாகும்.

இந்த தலையீட்டின் போது, NPC குழுக்களை அமைத்து அவர்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகள் பெண்களுக்கு வாழ்வாதாரத் திறன்களைப் பயிற்றுவிப்பது முதல் இந்த வசதியை இதற்கு முன் அனுபவிக்காத சமூகத்தில் ஒரு நூலகத்தை நிறுவுவது (நூலகத்திற்கு தேவையான புத்தகங்களை வழங்குதல்) வரையிலானதாக இருந்தது. அம்பாறை, யாழ்ப்பாணம், மொனராகலை, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து விடயக்கலை ஆய்வுகள் எடுக்கப்பட்டு, அவற்றின் தாக்கத்தை சிங்களம், தமிழ், முஸ்லிம், சிவில் சமூகம் மற்றும் அரசு - மற்றும் செயற்பாட்டுக் கிளைகள் - தலையீடுகள், பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாடு எனப் பல கோணங்களில் கவனம் செலுத்துகின்றன.

இந்த திட்டத்தில் அரச அதிகாரிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு பாரபட்சமற்ற வாடிக்கையாளர் சேவைக்கான பயிற்சி சமாதானத்திற்கான அமெரிக்க நிறுவகம் (US Institute for Peace) செய்த தேவை மதிப்பீட்டில் இருந்து உருவானதுடன் மற்றும் சுயபரிசோதனை மற்றும் சுய மதிப்பீட்டிற்கான இடத்தை வழங்குதல் மற்றும் அதன் குடிமக்களுடன் அரச ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளில் வெற்றி பெற்றது.

ஒரு SCORE பங்காளி என்ற வகையில், திட்டத்தின் கருத்துருவாக்க கட்டத்தில் இருந்து தேசிய சமாதானப் பேரவையானது (NPC) இனங்களுக்கிடையிலான ஆக்கபூர்வமான உறவுகள் மற்றும் போருக்குப் பிந்தைய ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான அதன் அனுபவம், அறிவு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றைக் கொண்டு வந்தது. சமூகத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு அவசியமான நிதியுதவியை வழங்கியமைக்காக USAID மற்றும் அமெரிக்க மக்களுக்குத் தேசிய சமாதானப் பேரவையானது (NPC) தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஜெஹான் பெரேரா
நிறைவேற்றுப் பணிப்பாளர்
தேசிய சமாதானப் பேரவை
2022 பெப்ரவரி

# சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான உரையாடல் மற்றும் நடவடிக்கையை இயக்குதல்

சமூக ஒருங்கிணைப்பு என்பது அடிப்படை சமூக முரண்பாடுகள் இல்லாதது மட்டுமல்ல, இயக்கபூர்வமான சமூக உறவுகளின் இருப்பையும் குறிக்கிறது. உண்மையில், இது போருக்குப் பிந்தைய இலங்கையில் நல்லிணக்கத்தை அடைவதற்கு ஒரு முன்நிபந்தனையாக பகிரப்பட்ட விழுமியங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொதுவான முயற்சிகளில் ஈடுபடுதல் பற்றியதாகும். சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்க செயல்முறைகளை வலுப்படுத்துதல் ஆகியன தேசிய சமாதானப் பேரவையின் பணியின் இரண்டு முக்கிய நோக்கங்களாக இருந்து வருகின்றன.

2018 ஆம் ஆண்டில், தேசிய சமாதானப் பேரவையானது (NPC) மற்றும் குளோபல் கொமியூனிடீஸுடன் (Global Communities) இணைந்து, பகிரப்பட்ட மற்றும் உள்ளடக்கிய இலங்கையின் அடையாளத்தை ஊக்குவிப்பதற்கும், நாட்டின் பல்வேறு இன மற்றும் மத சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் மீளெழுச்சியை வலுப்படுத்துவதற்கும், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க (SCORE) செயற்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றது. மூன்று ஆண்டுகளில், தேசிய சமாதானப் பேரவையின் (NPC) நடவடிக்கைகள், பிரிந்த சமூகங்கள் முழுவதும் சமூக ஒற்றுமையை மேம்படுத்த குடிமக்கள் உந்துதல் முயற்சிகளை வலுப்படுத்தியது, நல்லிணக்க செயல்முறைகளில் ஆக்கபூர்வமான சமூக ஈடுபாட்டை எளிதாக்கியதுடன் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்த உள்நாட்டு மற்றும் தேசிய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்தியது.

தேசிய சமாதானப் பேரவையானது (NPC) வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மொனராகலை, கண்டி, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சமூக உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் வசதிகளை அளித்து பல்வேறு சமூகங்களுடன் உரையாடல்களை மேற்கொள்ளவும் மோதலை ஏற்படுத்திய அல்லது மோதலை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்ட சிக்கல்களைக் கண்டறிந்து தீர்வு காணவும் உதவுகின்றது. எனவே, SCORE இன் ஆணையை அடைய, தேசிய சமாதானப் பேரவையானது (NPC) அரசாங்கம் மற்றும் அரசு சாரா முயற்சிகள் மூலம் பணியாற்றியது. இந்தத் திட்டம் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் உள்ள சமூகங்களுடன் இணைந்து செயல்பட்டதுடன்ம் மக்களின் முரண்பாடுகளைத் தணித்தல் மற்றும் தலைமைத்துவ திறன்களை கட்டியெழுப்பும்போது உள்ளடக்கிய சமூக தீர்மானமெடுக்கும் தளங்களுக்கான திறன்களை மேம்படுத்தியது. சமூக அடிப்படையிலான செயல்பாடுகள் மோதலால் பாதிக்கப்பட்ட மக்கள் நிலையான சமாதானத்தை நோக்கிச் செயல்பட உதவியது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில், தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் இளவாலை வடமேற்கு, பலாலி வடக்கு, கொல்லங்கலட்டி, பளை வீமன் காமம், வசாவிளான் கிழக்கு ஆகிய ஐந்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. மொனராகலை, புத்தல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மஹகொடயாய, மஹசென்புர, உடகம கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொனராகலை பிரதேச செயலகப் பிரிவில் மதுரகட்டிய, கும்புக்கன கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இத்திட்டம் செயற்பட்டது. திருகோணமலையில், சேருவில பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சமகிபுர, அரியமன்கேணி, லிங்கபுரம், சுமேதங்கரபுர, மற்றும் நாவக்கேணிக்காடு கிராம அலுவலர் பிரிவுகளில் ஞூஊமுசுநு தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. வவுனியாவில், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் பட்டுக்குடியிருப்பு, அக்போபுர, வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் மருதமடு மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நேரியகுளம், உடையார்குளம் ஆகிய இடங்களில் SCORE செயற்பாடுகளை மேற்கொண்டது.

## திட்டம் எவ்வாறு செயற்பட்டது

### சமூக இணைப்பாளர்கள்

சமூகங்கள் மற்றும் SCORE ஆகியவற்றுக்கு இடையே ஒரு பாலத்தை உருவாக்க, தேசிய சமாதானப் பேரவையானது (NPC) அரச துறை, சிவில் சமூகம் அல்லது அடிமட்ட அளவிலான சமூகங்களிலிருந்து அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து சமூக இணைப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. சமூக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக அடிமட்ட சமூகங்களை அணிதிரட்டுவதில் அவர்கள் SCORE விற்கு உதவினர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக இணைப்பாளர்களை களப்பணியில் ஈடுபடுத்துவதற்காக, 34 பங்கேற்பாளர்களுடன் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வானது 2019 சனவரி மாதம் நடைபெற்றது. திறனை வளர்ப்பதற்கான ஊடாடும் பங்கேற்பு அணுகுமுறைகளுக்கான மாற்றுப் பயிற்சியில் (PALTRA) நிபுணத்துவம் பெற்ற ஆலோசனைக் குழுவின் பங்காளிகளின் வசதிப்படுத்தலுடன் செயலமர்வுகளுக்கான புதிய பயிற்சி மொடியூல் உருவாக்கப்பட்டது.

### சமூக மதிப்பீடுகள்

SCORE ஆனது 2019 ஆம் ஆண்டில் அனைத்து செயற்றிட்ட மாவட்டங்களிலும் சமூக மதிப்பீடுகளை நடத்தியது. மதிப்பீடுகள் மூலம், தேசிய சமாதானப் பேரவையின் (NPC) குழு கிராமத்தின் வரலாற்றுத் தகவல் அதன்

புவியியல் அமைப்பு மற்றும் மக்கள்தொகை சுயவிவரம் மத, சமூக மற்றும் கலாசார பின்னணி, வாழ்வாதாரங்கள் மற்றும் வருமான ஆதாரங்கள் சுற்றுச்சூழல் நிலைமைகள், காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்கள் சமூக நிறுவனங்கள் மற்றும் சமூக வலைப்பின்னல்கள் இனங்களுக்கிடையிலான குழு தொடர்புகள், பாலின பரிமாணங்கள் மற்றும் பெண் பங்கேற்பு, சமூக கட்டமைப்பிற்குள் ஒதுக்கப்பட்ட குழுக்களை நடாத்தும் விதம், இளைஞர்கள் மற்றும் சிறுவர் பங்கேற்பு மற்றும் கல்வி மட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளின் கிடைப்பனவு தொடர்பான பெறுமதிமிக்க தரவுகளை சேகரித்தது. இந்த கண்டுபிடிப்புகள் அடுத்தடுத்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில், இளவாலை வடமேற்கு, பலாலி வடக்கு, கொல்லங்கலட்டி, பளை வீமன் காமம், தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் வசாவிளான் கிழக்கு ஆகிய ஐந்து செயற்பாட்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மொனராகலை, புத்தல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மஹகொடயாய, மஹசென்புர, மற்றும் உடகம கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. திருகோணமலை, சேருவில பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சமகிபுர, அரியமன்கேணி, நாவக்கேணிக்காடு கிராம சேவையாளர் பிரிவுகளில் மூன்று சமூக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியாவில், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பட்டிக்குடியிருப்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

## பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் வசதிப்படுத்துதல்

உள்ளூர் அதிகாரசபைகள், சிவில் சமூக அமைப்புகள் (CSOs) மற்றும் கிராம மட்டத்தில் உள்ள சமூக உறுப்பினர்களுக்கு பயிற்சி மற்றும் வழிகாட்டுதலுக்கான மக்களிடமிருந்து மக்கள் (P2P) முறைகளைப் பயன்படுத்தி, அடிமட்ட சமூகங்கள் மற்றும் உள்ளூர் மற்றும் மத்திய அரசாங்கப் பாத்திரங்களை பிளவுகளின் எல்லைகளில் ஒன்றிணைத்து நேர்மறையான மாற்றத்திற்காக கூட்டணிகளை உருவாக்கியது.

கிராம உத்தியோகத்தர் மட்டப் பயிற்சிகள் மற்றும் கொத்தணி ரீதியாக சமூக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் நல்லிணக்கச் செயற்பாட்டில் ஆக்கபூர்வமான சமூக ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான முயற்சிகளை இத்திட்டம் மேற்கொண்டது. மேலும், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி பற்றிய உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்க செயற்பாட்டாளர்களின் அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை இத்திட்டம் மேற்கொண்டது.

யாழ்ப்பாணத்தில், வன்முறையற்ற தொடர்பாடல் பயிற்சிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்புடன் அமைதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பு பற்றிய பாடசாலை விழிப்புணர்வு உருவாக்கம் இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் சகவாழ்வு சங்க உறுப்பினர்களின் பங்கேற்புடன் வேலி கட்டுதல் (சமூக மட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த திட்டத்துடன் இணைந்து செயல்படும் சமூக தளங்களின் உறுப்பினர்கள்) தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட SCORE பயனாளிகள் மொனராகலை சகாக்களின் இடத்திற்கான ஒரு பரிமாற்ற விஜயம் ஆகிய நடவடிக்கைகள் உள்ளடங்குகின்றன.

மொனராகலையில், தேசிய சமாதானப் பேரவையின் (NPC); SCORE குழு, நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்காக பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்ய இரண்டு கொத்தணிரீதியிலான செயற்பாடுகளையும் பதினைந்து கிராம அலுவலர் மட்ட நடவடிக்கைகளையும் நடத்தியது. பல்வேறு சமூகங்களுக்கு சமாதானம் தொடர்பான கருத்துகள் குறித்த பயிற்சி செயலமர்வுகள், வாசிப்பின் மூலம் நல்லிணக்கத்தை வலுப்படுத்த புத்தக நன்கொடை நிகழ்ச்சியுடன் உலக புத்தக தினம் நினைவு கூறப்பட்டது அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் மோதலுக்கு வழிவகுக்கும் பகுதிகளை நிவர்த்தி செய்ய, சமூக உரையாடல்களின் சங்கிலியாகிய "நினைவகத்தின் பயன்பாடு" திட்டத்தை செயல்படுத்தியது. இந்த உரையாடல்கள் மூலம், பல்வேறு சமூகங்களுக்கிடையில் அமைதியான உறவுகளைப் பேணுவதற்கு சமூக மட்டத்தில் SCORE குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் மொடியூலானது பின்னர் "அன்றாட சனநாயகத்தின் மூலம் நெகிழ்ச்சியான சமூகங்கள்" எனும் ஒரு விரிவான பயிற்சித் மொடியூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது: சமூகத்தில் சனநாயகத்தை வலுப்படுத்துவதில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அவர்களின் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் மதிப்பு அடிப்படையிலான சனநாயக சமூகத்திற்கான சமூக உறுப்பினர்களின் பங்கு குறித்து பங்கேற்பாளர்களிடையே உரையாடலைத் தூண்டுவதற்காக இந்த மொடியூல் உருவாக்கப்பட்டது. மேலும், வடக்கிலுள்ள சமூகங்களுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக சமூகப் பிரதிநிதிகளுடன் சமூகப் பரிமாற்ற நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மதுரகெட்டிய கிராம அலுவலர் பிரிவில் 'வன்முறையற்ற தொடர்பாடல்' தொடர்பான செயலமர்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

திருகோணமலையில், SCORE ஆனது சமகிபுர மற்றும் அரியமன்கேணியில் 50 பெண்களுக்கான கலாசார பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் போன்ற 14 கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் இரண்டு கொத்தணிரீதியலான செயற்பாடுகளையும் வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) பயிற்சிகள் பாடசாலை மாணவர்களுக்கான "நல்லிணக்கம்" தொடர்பான வேலைத்திட்டம் சமூக மேம்பாட்டிற்கான பங்கேற்பு நடவடிக்கை (PACE), சமகிபுரவில் சகவாழ்வு சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சி மற்றும் நாவக்கேணிக்காடு கிராம அலுவலர் பிரிவு மற்றும் சுமேதங்கரபுர கிராம அலுவலர் பிரிவுகளின் சமூக உறுப்பினர்களுக்கு "நினைவகத்தின் பயன்பாடு" பற்றிய பயிற்சிகள் ஆகியவற்றை மேற்கொண்டது.

வவுனியாவில், ஒரு கொத்தணிரீதியான நடவடிக்கை மற்றும் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான வீதி நாடகம் உட்பட மூன்று கிராம அலுவலர் பிரிவு மட்டச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்கான மத்திய அரசாங்க மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் திறன்களை மேம்படுத்த, SCORE ஆனது, அதன் கட்டம் I இன் செயல்பாட்டு மாவட்டங்கள் அனைத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச அலுவலர்கள் மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு "சட்ட விதி" மற்றும் "சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம்" குறித்த தொடர் பயிற்சிகளை நடத்த முனைந்தது. அதன்படி, ஏறத்தாழ 135 அரச அதிகாரிகள் மற்றும் 90 உள்ளூராட்சி அதிகாரசபை பிரதிநிதிகளுக்கு அந்தந்த பிராந்தியங்களின் நல்லிணக்கச் செயல்பாட்டில் ஈடுபடுத்தவும், அத்தகைய நோக்கங்களுக்காக அவர்களின் பிராந்திய சமூக தளங்களுக்கு உதவவும் இந்த முன்னெடுப்பில் பயிற்சி வழங்கப்பட்டது.

2020 அக்டோபர் மாதத்தில் இரண்டாம் கட்டத்தைத் தொடங்கி, நாட்டில் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்காக இந்த சமூகத் தளங்களை மேம்படுத்துவதற்கு SCORE சகவாழ்வுச் சங்கங்களுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கியது. இரண்டு அல்லது மூன்று கிராம அலுவலர் பிரிவுகளை இணைத்து பதினாறு பயிற்சி குழுக்கள் உருவாக்கப்பட்டன. கண்டி, மட்டக்களப்பு, மொனராகலை, திருகோணமலை, அம்பாறை, அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயற்பட்டது. இந்த கட்டத்தில், அடிமட்ட அளவிலான சமூகங்களின் சனநாயக விழுமியங்கள் பற்றிய அறிவை மேம்படுத்துவதற்காக, அனைத்து சகவாழ்வுச் சங்கங்களுக்கும் 'அன்றாட சனநாயகத்தின் மூலம் நெகிழ்ச்சியான சமூகங்கள்' குறித்த பயிற்சிப் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

மேலும், திட்டக்குழு, அரசாங்க அலுவலர்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு 'பாரபட்சமற்ற வாடிக்கையாளர் சேவை' குறித்த பயிற்சிகளை மேற்கொண்டது. இந்த பயிற்சிகள் இரண்டு படிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டன.

அ) தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு பாரபட்சமற்ற வாடிக்கையாளர் சேவை (NDCS) பற்றிய தேவையான அறிவு மற்றும் அணுகுமுறைகளை வழங்குதல். இந்தக் கூறு பாலினம் மற்றும் அங்கவீனம் உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

ஆ) நிறுவனத் தலைவர்களின் ஆதரவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பாரபட்சமான வாடிக்கையாளர் சேவை நடைமுறைகளைக் கண்டறிந்து சரிசெய்தல்.

SCORE திட்ட நடவடிக்கைகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தேசிய சமாதானப் பேரவையின் (NPC); தற்போதைய மற்றும் எதிர்கால வேலைகளுக்கு ஊட்டமளிக்கும். சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அவர்களின் பணியின் தொடர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை எளிதாக்குவதற்கு தேசிய சமாதானப் பேரவையானது (NPC); அரச மற்றும் அரசு சாரா உள்ளூர் கூட்டாளர்கள் இரு தரப்பினருடனும் தொடர்பில் இருக்கும்.

இந்த கையேடு 2018 முதல் 2021 வரையிலான தேசிய சமாதானப் பேரவையின் (NPC); SCORE; செயல்பாடுகளின் தொகுப்பாகும். பகிரப்பட்ட நோக்கத்திற்காக எங்களுடன் கூட்டு சேர்ந்து பணியாற்றிய பின்வரும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் பங்களிப்பை நன்றியுடன் ஒப்புக்கொள்ள விரும்புகிறோம்:

சர்வோதய - கண்டி

அணுகல், கண்காணிப்பு மற்றும் ஊனமுற்றோர் பற்றிய தகவல் மையம் (CAMID) - மட்டக்களப்பு

மகளிர் அபிவிருத்தி சம்மேளனம் - மொனராகலை

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு – அம்பாறை, யாழ்ப்பாணம்

மக்கள் அபிவிருத்தி மன்றம் - திருகோணமலை


மனிதநேயம் மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்திக்கான மையம் (CHID) - முல்லைத்தீவு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (SLRC) - வவுனியா

# புரிந்துகொள்வதற்காகக் கற்றல்

## சமூக ஒற்றுமை ஏன் முக்கியமானது

“நூலகம் என்பது அனைவரும் சமமாக இருக்கும் அற்புதமான இடம். யாரும் நுழைவதை யாரும் தடுக்கவில்லை - அனைவரும் வரவேற்கப்படுகிறார்கள்,”என்று 19 வயதுடைய மஹசென்புரவைச் சேர்ந்த உதார விக்கிரமசிங்க கூறுகிறார், அவர் ஐந்து வயதிலிருந்தே நூலகப் பயனாளியாக இருந்து வருகிறார். “புத்தகங்கள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன, ஆனால் வருகை தரும் மக்கள் - வெவ்வேறு இனங்கள், மதங்கள் அல்லது சாதிகளைச் சேர்ந்தவர்கள் - அவர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்படவில்லை. நாங்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்பதால், நாங்கள் ஒருவருக்கொருவர் பேசுவதில்லை, ஆனால் நாங்கள் அனைவரும் ஒன்றாக வாசிக்கிறோம், கற்றுக்கொள்கிறோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.



வெவ்வேறு நபர்களை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருவதனால் நூலகத்தை உதாரா மதிக்கிறார்



பாத்திமா நூலகத்தை தன்னை சுதந்திரமாக விடுவிக்கும் இடமாக பார்க்கிறார்

மஹசென்புர, இலங்கையின் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றாக கருதப்படும் மொனராகலையின் புத்தல பிரதேச செயலகப் பகுதியில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் நூலகம் இல்லை, ஆனால் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம், பெல்வத்தையில் உள்ள தனது பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள நூலகத்திற்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு வகையான. கலாசாரம் மற்றும் சமூகம் பற்றிய புனைகதைகள் முதல் வாழ்க்கை வரலாறுகள் வரையிலான புத்தகங்கள் நன்கொடையாகக் கிடைத்ததன் மூலம் பயனடைந்ததில் விசேடமாக மகிழ்ச்சி அடைகிறார். இது மொனராகலையில் தேசிய சமாதானப் பேரவையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க (SCORE) வேலைத்திட்டத்தின் முன்னெடுப்பாகும். “புத்தகங்களை மக்களுக்கு வழங்குவது மிகவும் சிறப்பு வாய்ந்த விஷயமாகும்” என்று அவர் பிரதிபலிக்கிறார், “தொலைதூர பகுதிகளில் நூலகங்கள் குறைவாக உள்ளதுடன் மக்கள் இருக்கும் நூலகங்களை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள்” என்றும் அவர் கூறினார்.

“ஒரே இரவில், எங்களின் சுமாரான நூலகத்தில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 200 இனால் அதிகரித்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு புதிய புத்தகங்களைப் பெற்றோம். பெரும்பாலும் எமது மாணவ உறுப்பினர்களால் இந்த பரிசு எவ்வளவு பாராட்டப்பட்டது என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும்” என்கிறார் பெல்வத்தை பொது நூலகத்தின் உதவி நூலகர் திலானி திஸாநாயக்க. “பெல்வத்தை மகா வித்தியாலயம் எமக்கு அயலில் உள்ளதுடன் பல மாணவர்கள் பாடசாலை முடிந்து ஒரு மணி நேரம் தங்கள் பேருந்து வரும் வரை காத்திருக்க வேண்டும். பாடசாலை முடிவடைந்து மணி அடிக்கும்போது நூலகம் நிரம்பிவிடும்” என்றும் கூறினார்.





நூலகத்திற்கு புத்தகங்களைப் பரிசளிப்பது சிறுவர்களை மேலும் வாசிக்க ஊக்குவிக்கும் நிகழ்வொன்றுடன் கொண்டாடப்படுகிறது

இது SCORE இனால் மேற்கொள்ளப்பட்ட சமூக மதிப்பீட்டில் கவனிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க தகவலாகும், இது முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான அடிப்படையாக இருந்தது. சமூக உறுப்பினர்கள் மற்றும் அனைத்து இனங்கள் மற்றும் மதங்களின் தலைவர்கள் பெண் மற்றும் ஆண் பிள்ளைகள், பெரியவர்கள் மற்றும் வயதானவர்கள் “சமூக இணைப்பாளர்கள்“ என்றும் அழைக்கப்படும் சமூக வசதிப்படுத்துனர் மற்றும் உள்நாட்டு அரசாங்க அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டுப் பயிற்சியாகும்.

“மஹசென்புரவில் பொது நூலகம் இல்லை என்பதை நாங்கள் குறிப்பிட்டோம். பெல்வத்தை பொது நூலகம் மிக அருகில் இருந்தது. பெல்வத்தை மற்றும் மஹசென்புர ஆகிய இரு பகுதிகளையும் சேர்ந்த சிங்கள், முஸ்லிம் மற்றும் தமிழ்ச் பிள்ளைகள் நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர்,” என்கிறார் சமாதானப் பேரவையின் செயற்றிட்ட அலுவலர் எஸ்.வீ.பீ. சேபாலிகா, தேசிய ”நூலகத்திற்கு வளங்களை வழங்குவதன் மூலம், மஹசென்புர மற்றும் பெல்வத்தை ஆகிய இரு பகுதிகளையும் சேர்ந்த மக்கள், குறிப்பாக சிறுவர்கள் பயனடைவார்கள் என்று நாங்கள் முடிவு செய்தோம்” சிறுவர்களுக்கான இலக்குக் குழு அமர்வுகள், கணிசமான எண்ணிக்கையிலான குடும்பங்கள் திறன்பேசிகள் மற்றும் இணைய இணைப்புகள் மூலமாக இணையத்தளத்தில் தகவல்களை அணுக முடியாதுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டியது.

மேலும், சிறுவர்களை வாசிக்கத் தூண்டுவதற்கும், அவர்களின் உள்ளூராட்சிப் பிரிவு, நாடு மற்றும் உலகளாவிய ரீதியில் உள்ள மக்களின் பலதரப்பட்ட கலாசாரங்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும் ஊடாடும் அமர்வுகளை இந்த நிகழ்ச்சி நடத்தியது. பங்கேற்பாளர்கள் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தின் கருப்பொருள்களையும் ஆராய்ந்தனர். “செயல்பாடுகள் வித்தியாசமாக இருந்தன, அவை எங்களுக்கு புதியவை” என்கிறார் உதார. “நாம் நமக்காக உருவாக்கிய வரையறுக்கப்பட்ட இடத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதை நாங்கள் உணர ஆரம்பித்தோம். நாம் இன்னும் நிறைய புரிந்து கொள்ளவும் பார்ப்பதற்கும் உள்ளன” என்றும் குறிப்பிட்டார்.





ஊடாடும் அமர்வுகள் சிறுவர்கள் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தைப் பற்றி சிந்திக்க தூண்டியது

பெல்வத்தையைச் சேர்ந்த 17 வயதான பாத்திமா ஹஸ்னாவும் வழக்கமான நூலகத்தைப் பயன்படுத்தும் ஒருவராவார்: "நான் நூலகத்தை சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான ஒரு சிறப்பு இடமாகப் பார்க்கிறேன். நாங்கள் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், ஆனால் நாங்கள் வீட்டில் இருப்பதாக உணர்கிறோம். நான் நூலகத்தில் இருக்கும் போது, நான் நிம்மதியாக உணர்கிறேன், இனி மன அழுத்தம் இல்லை. எல்லைகள் இல்லை. நாங்கள் நூலக விதிகளைப் பின்பற்ற வேண்டும், ஆனால் நான் சுதந்திரமாக உணர்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

பாத்திமா ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் போது, பாடசாலை முடிந்ததும் அவரது தாயார் அவளை நூலகத்திலிருந்து அழைத்துச் செல்வார். ஆனால் அவள் பெரியவளாகி, பேருந்து மூலம் வீடு திரும்ப முடிந்தாலும், அவளும் அவளுடைய தோழிகளும் நூலகத்தில் நேரத்தைச் செலவழித்தார்கள். 45 வயதான சித்தி ஹதீஜா கூறுகையில், "என் மகள் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறாள். அவளது சிறுவயது முதல் அவளுக்குப் புத்தகங்கள் வேண்டும். விளையாட்டுப் பொருட்களைக் கேட்கவில்லை. சிறுவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பொது மக்களுக்கும் நூலகத்தை ஒரு நல்ல இடமாக நான் பார்க்கிறேன். பாத்திமா ஒரு வைத்தியராக விரும்புகிறாள், அவள் அதை அடைவாள் என்று எனக்குத் தெரியும்" என்று கூறினார்.

உதார தனது உயர் தரத்தில் வணிகம் தொடர்பான பாடங்களைப் படித்திருந்தாலும், அவரது 'அழைப்பு' வியக்கத்தக்க வகையில் வேறுபட்டது: "எங்கள் மெதடிஸ்ட் தேவாலயத்தில் நான் பாதிரியாராக விரும்புகிறேன். அமைதியும் நல்லிணக்கமும் நமக்குள் உள்ளன, அவை வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். மக்கள் சகவாழ்வை மதிப்பதில்லை என்பதாலேயே தேசிய சமாதானப் பேரவை மற்றும் ஒத்த அமைப்புக்கள் உள்ளன என்பதை நான் உணர்கிறேன். இது உப்பு போன்றது, அது உயிரைப் பாதுகாக்கிறது, அது இல்லாமல் நாம் செய்ய முடியாது. புத்தகங்களிலிருந்து நாம் எவ்வளவு தூரமாக இருக்கிறோமோ, எவ்வளவு குறைவாகப் புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு நாம் நிம்மதி குறைந்தவர்களாக வாழ வேண்டி ஏற்படும் என்று நான் நினைக்கிறேன்" என்றார்.

குறிப்பிடத்தக்க வகையில், உதாரவின் குடும்பம் பெரிய சமுதாயத்தின் நுண்ணிய உருவமாக கருதப்படலாம். "நானும் என் அம்மாவும் கிறிஸ்தவர்கள். எனது தந்தையும் எனது இரண்டு சகோதரர்களும் பௌத்தர்கள்" என்று அவர் குறிப்பிடுகிறார். "நாங்கள் பல மத குடும்பம் மற்றும் எனது உடன்பிறந்தவர்கள், நான் ஒரு குறிப்பிட்ட மதத்தைத் தேர்ந்தெடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை. என் தந்தை ஒரு ஆயுர்வேத மருத்துவர் மற்றும் என் அம்மா ஒரு சிறிய கடை வைத்திருக்கிறார். எங்கள் விருப்பப்படி எந்த மதத்தையும் பின்பற்ற அனுமதித்தார்கள்." எவ்வாறாயினும், கிறிஸ்தவர்கள், குறிப்பாக தேவாலயத்திற்கு நெருக்கமானவர்கள், ஒரு குறிப்பிட்ட அளவு அவநம்பிக்கையுடன் பார்க்கப்படுவதைக் குறித்து அவர் கவலைப்படுகிறார்: "மதமாற்றம் மற்றும் பிற மதங்களை அவமரியாதையுடன் நடத்துவதாக நாங்கள் குற்றம் சாட்டப்படுகிறோம். இது அப்படியல்ல என்பதை மக்களுக்கு புரிய வைக்க விரும்புகிறோம்."

சமீபத்தில் அவளது சாதாரண தரப் பரீட்சை முடித்ததில் இருந்து, பாத்திமா தனது ஓய்வு நேரத்தின் ஒரு பகுதியில் சிறுவர்களின் கல்விக்கு உதவ முடிவு செய்தாள்: "அவர்கள் ஏதாவது கற்றுக்கொள்ள விரும்பினால் அவர்கள் என்னிடம் வருகிறார்கள். முஸ்லிம் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, சிங்கள, தமிழ் சிறுவர்களுக்கும் உதவுகிறேன், இதன் பின்பு தேவையில்லாத புத்தகங்களை பதுக்கி வைக்காமல் கொடுத்து விடுகிறேன். சிறுவர்களை வாசிக்குமாறு ஊக்குவிக்கிறேன். தொற்றுநோய்களின் போது, வாசிப்பின் முக்கியத்துவம் இன்னும் தெளிவாகத் தெரிந்தது. வாசிப்பு நம்மை முழுமைப்படுத்துகிறது என்ற முதுமொழியுடன் நான் உடன்படுகிறேன்" என்று கூறினாள்.

உதார இன்னும் ஒரு படி மேலே செல்கிறார். "வாசிப்பதன் மூலம் மக்களை ஒன்றிணைக்க முடியும்" என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். சமாதானத்திற்கு சமூக ஒற்றுமை எவ்வளவு முக்கியம் என்பது பற்றிய விவாதங்களை அவர் தொடர விரும்புகிறார்: "இன்று நீங்கள் இலங்கை சமூகத்தைப் பார்க்கும்போது, சமாதானம் இன்னும் நிச்சயமற்றதாகவும், ஓரளவு தற்காலிகமாகவும் இருப்பதைக் காணலாம்... சிறியதாக ஆரம்பிக்கலாம், ஆனால் எங்கள் பணி வேகம் பெற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

## "நாங்கள் சாத்தியக்கூறுகளைப் கண்டோம்...."

### யசோதா மகளிர் சங்கம் தன்னை மாற்றிக்கொண்டு சமூகத்தை பலப்படுத்துகிறது

2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி புத்தலப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பெண்கள் குழுவொன்றின் வித்தியாசமான கூட்டம் ஒன்று நடைபெற்றது. உடகம கிராமத்தைச் சேர்ந்த முழுக்க முழுக்க சிங்களப் பெண்களை உள்ளடக்கிய யசோதா மகளிர் சங்கம், தமது அயலிலுள்ள முஸ்லிம் பெண்களை தம்முடன் இணைத்துக்கொள்ள அழைப்பதன் மூலம் தமது செயலாற்றல் குறைந்து வரும் குழுவை மீண்டும் புத்துயிர் ஊட்ட தீர்மானித்திருந்தது.

இது குறிப்பாக, இரண்டு மாதங்களுக்கு முன்னர், ஏப்ரல் 21 ஆம் திகதியன்று, மூன்று தேவாலயங்கள் மற்றும் ஐந்து ஹோட்டல்களைக் குறிவைத்து, ஒரு முஸ்லிம் தீவிரவாதக் குழு நடத்திய தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், இலங்கையின் மூன்று மாவட்டங்களில் 258 பேர் கொல்லப்பட்டனர். குண்டுவெடிப்புகளின் விளைவுகள் நாடு முழுவதும் உணரப்பட்டன, முஸ்லிம் சமூகம் வன்முறை மற்றும் வெறுப்பின் இலக்குகளாக மாறியது.

2002 இல் யசோதா மகளிர் சங்கத்தை உருவாக்கிய 66 வயதான பிரேமலதா உடகம, "ஆம், மக்கள் கைளாள முயற்சிக்கும் கோபமும் அவநம்பிக்கையும் இருந்தது. முஸ்லிம் குடும்பங்கள் எமது வீடுகளிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கும் குறைவான தூரத்தில் வாழுகின்றனர். எமக்கு அவர்களுடன் மேலும் எங்களுக்குள் எந்த முரண்பாடுகளும் இல்லை. நாட்டின் பிற பகுதிகளில் நடக்கும் மோதல்கள் நம்மை அடையாமல் தடுக்க வேண்டும் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்தோம். நாங்கள் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்." என்று குறிப்பிட்டார்.







குழுவில் சேர முஸ்லிம் பெண்களை அழைப்பது ஒரு மாற்றமாக இருந்தது

சங்கத்தின் புதிய உறுப்பினராகிய 34 வயதான எஸ். சரி.்.பா: “குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு நாங்கள் மக்களிடமிருந்து சில கோபத்தை உணர்ந்தோம், மேலும் நாட்டின் பல பகுதிகளில் முஸ்லிம்கள் குறிவைக்கப்படுவதையிட்டு நாங்கள் வேதனையடைந்தோம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். நாங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எங்கள் கிராமத்தில் வன்முறைப் பின்னடைவுகள் இல்லை. இந்தக் குழுவின் மூலம் எமது சிங்களச் சகோதரிகளுடன் வலுவான நட்புறவைக் கட்டியெழுப்புவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்றார்.

தேசிய சமாதானப் பேரவையால் செயல்படுத்தப்பட்ட SCORE திட்டத்தின் மூலம் இந்த முயற்சி எளிதாக்கப்பட்டது. ஆனால் முதலில், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பங்காளிகள், சமூக ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான பல்வேறு அம்சங்களில் விரிவான ஏழு நாள் பயிற்சி திட்டத்தில் பங்கேற்றனர். புத்தலயில் SCORE நடவடிக்கைகளை ஒருங்கிணைத்த சாந்தி குசும் அவர்கள்: “பயிற்சியின் மிக முக்கியமான பகுதி முரண்பாடுகளைத் தீர்த்தல் என்று நான் உணர்ந்தேன். மேலோட்டமாகப் பார்த்தால், முரண்பாடுகள் இல்லாததாகத் தோன்றினாலும், இது எப்போதும் அப்படி இருக்காது என்பதை அறிந்தேன். பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மை மற்றும் பாலின சமத்துவமின்மை எவ்வாறு மோதலை ஏற்படுத்தலாம் மற்றும் சகவாழ்வை அச்சுறுத்தலாம் என்பதையும் நாங்கள் புரிந்துகொண்டோம். நான் 13 ஆண்டுகளாக சமூக மேம்பாட்டு அதிகாரியாக பணியாற்றி வருகிறேன், ஆனால் முரண்பாட்டின் சிக்கலான தன்மையை நான் புரிந்துகொள்வது இதுவே முதல் முறை ஆகும்” என்றார்.




சாந்தி குசும் புத்தலயில் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றத் தொடங்குவதற்கு முன்னர் சகவாழ்வு மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான பயிற்சித் திட்டத்தைப் பின்பற்றினார்.

உடகமவில் உள்ள சமூக மதிப்பீட்டில், கிராமத்தில் உள்ள பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் தங்கள் வீடுகளில் அடைபட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை, மேலும் அவர்களின் சமூகத்திற்கு அப்பால் சமூக அல்லது பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக அரிதாகவே வெளியேறினர். மேலும் மதிப்பீடு நடந்தபோதும், பெரும்பாலும் முஸ்லிம் ஆண்களே கலந்து கொண்டனர். பரந்த கிராம சமூகத்துடன் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட முஸ்லிம் பெண்களை ஊக்குவிப்பதன் அவசியத்திற்கு இந்த திட்டம் முன்னுரிமை அளித்தது. “முஸ்லிம் பெண்களின் நடமாட்டம் அவர்களின் சுற்றுச்சூழலுடன் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது. எங்களைப் போல் அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை” என்கிறார் பிரேமலதா. “நாங்கள் அவர்களின் வீடுகளுக்குச் சென்று, பெண்கள் சமுதாயமாக நாங்கள் என்ன சாதிக்க விரும்புகிறோம் என்பதை விளக்கினோம். நாங்கள் அவர்களைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்பினோம், எங்கள் வாழ்வாதாரத்தை ஒன்றாக இணைந்து மேம்படுத்த விரும்பினோம். எங்களுடன் சேர அவர்களை நாங்கள் இணங்க வைத்தோம்” என்று கூறினார்.

பெண்களின் சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் அடிமட்ட அளவில் உறவுகளை வலுப்படுத்துதல் ஆகிய இரண்டு நோக்கங்களையும் ஒன்றிணைத்து, SCORE பெண்கள் குழுவிற்கு “சகவாழ்வின் மூலம் வணிகத் தலைமைத்துவம்“, “பல கலாசார சூழலில் ஒரு பொதுவான இலக்கினை அடைவதற்காக பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலுடன் ஒரு குழுவை உருவாக்குதல்” என்ற பயிற்சி செயலமர்வை ஏற்பாடு செய்தது. பங்கேற்பாளர்கள் ஒரு தொடர்பாளர், பேச்சுவார்த்தையாளர், வலையமைப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளராக ஒரு தலைவரின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடினர். பல கண்ணோட்டங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக ஒற்றுமை ஆகிய இரண்டிற்குமாக ஒரு கூட்டாக செயல்படுவதன் பெறுமதியையும் இந்த செயலமர்வு எடுத்துரைத்தது.



“நாங்கள் செயலமர்வில் பங்கேற்றோம், அதற்கான சாத்தியக்கூறுகளைப் பார்த்தோம்,” என்கிறார் சரீ∴பா. “நான் சிறு வியாபாரத்தில் ஈடுபட்டதில்லை. குழுவிற்கு வெளியேயும் சிங்கள சமூகத்துடன் உரையாட ஆரம்பித்தேன். வாரத்திற்கு இரண்டு முறை விற்பனைக்காக இடியப்பம் தயாரிப்பதற்கு முடிவு செய்தேன். நான் சிங்களக் கடையில் மாவை வாங்குகிறேன் அவர்கள் எனக்கு கழிவு தருகிறார்கள். மேலும் நான் ஒரு முஸ்லிம் கடையில் இடியப்பங்களை விற்கிறேன்” என்றார். யசோதா சங்கத்தில் தனது உறுப்பாண்மையானது தனது வாழ்வை மாற்றியமைப்பதாக சரி∴பா பார்க்கிறார்: “இது என் வாழ்க்கையை மாற்றிவிட்டது. நான் எப்போதும் கூட்டங்களைத் தவறவிடுவதில்லை. ஆனால் சில சமயங்களில், என் பிள்ளை நோய்வாய்ப்படும்போது, நான் மிகவும் துக்கத்தை உணர்கிறேன். நான் வீட்டில் இருக்கும்போது, நான் கொஞ்சம் மன அழுத்தத்தை உணர்கிறேன். குழு சந்திக்கும் போது, அந்த பிரச்சனைகள் இல்லை என்பது போல உணர்கின்றேன். இது பெண்களுக்கு நல்லது” என்றும் கூறினார்.

சரி∴பா ஒரு சிறிய உணவு வியாபாரத்தைத் தொடங்கினார், அதை அவர் படிப்படியாக விரிவுபடுத்துவார்.

முஸ்லிம் பெண்கள் சங்கத்துடன் இணைந்த போது, பரந்த இலங்கை சூழலில் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின்மை குறித்து உறுப்பினர்கள் கலந்துரையாடினர், படிப்படியாக புரிந்துணர்வையும், நட்புறவையும் - மரியாதையையும் கட்டியெழுப்பினார்கள். “எங்கள் குழுவில் பல முஸ்லிம் பெண்கள் படித்தவர்கள் மற்றும் எங்கள் செயல்பாடுகளைத் திட்டமிட உதவுகிறார்கள்,” என்கிறார் பிரேமலதா. “எனது முஸ்லிம் சகோதரிகள் எனது தாவர வணிகத்தின் விற்பனையை உயர்த்த எனக்கு உதவுகிறார்கள். சமீபத்தில் அம்பாறையிலிருந்து அந்தூரியம் வாங்குவதற்காக ஒரு குழுவினர் என்னிடம் வந்தனர்.



பிரேமலதா அவரது இலாபத்தை அதிகரிக்கும்புதிய வெனிலாச் செடிகளை பராமரிக்கின்றார்

யசோதா மகளிர் சங்கத்தின் சிங்கள உறுப்பினர்கள் கிராமத்தில் உள்ள விகாரைக்கு வருமாறு தங்கள் முஸ்லிம் சகாக்களை அழைக்க முடிவு செய்தனர். “எங்கள் விகாரைகளுக்கு முஸ்லிம்கள் செல்வது அரிது. அவர்கள் அங்கு இருக்க மிகவும் ஆர்வமாக இருந்தனர், அவர்கள் எங்களுக்கு விகாரை வளாகத்தை சுத்தம் செய்ய உதவினார்கள், விளக்குமாறு மற்றும் தரைவிரிப்புகளை நன்கொடையாக அளித்தனர். தலைமை துறவி வரவேற்றார். பின்னர், பள்ளிவாசலுக்குச் சென்று பள்ளிவாசல் வளாகத்தை சுத்தம் செய்து மௌலவிகளுடன் பேசினோம். மற்றொரு சந்தர்ப்பத்தில் நாங்கள் முஸ்லிம் பாடகர் மொஹிதீன் பெய்க்கின் பௌத்த பக்தி பாடல்களைப் பாடினோம். நாங்கள் வலுவான சகோதரத்துவ உணர்வை உருவாக்கியுள்ளோம். அதை விளக்குவது கடினம், ஆனால் அது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது” என்றார்.

# இளைஞர்கள்

## மற்றும் மோதல்

"மதுருகெட்டிய ஒரு டஜன் சிறிய கிராமங்களைக் கொண்டது. எங்களுடையது சிங்களக் கிராமம், அதற்கு அப்பால் தமிழ் கிராமம், அதற்கு அப்பால் உள்ள கிராமம் முழுவதுமாக முஸ்லிம்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கிராமங்கள் ஒரு கிலோமீற்றருக்கும் குறைவான துாரத்தினாலேயே பிரிக்கப்பட்டுள்ளன, ஆனால் நாங்கள் ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை," என்று 28 வயதான ஹசித சதுரகே கூறுகிறார்.

இலங்கையில் ஏறக்குறைய மூன்று தசாப்த கால யுத்தம் 2009 இல் முடிவடைந்தது, ஆனால் அதன் பல காரணங்கள் மற்றும் தாக்கங்கள் உள்ளன. நாட்டின் இளைஞர்கள் சமத்துவமின்மை மற்றும் பிளவுபடுத்தும் அரசியலுடன் தொடர்புடைய பாதுகாப்பின்மை மற்றும் பாதிப்பை தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். அவர்கள் சந்தேகத்திற்கிடமானவர்களாகவும், அவநம்பிக்கை கொண்டவர்களாகவும், வித்தியாசமானவர்களாகவும் கருதப்படும் நபர்களைக் கண்டு பயப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் - இது ஆபத்தானது.

'சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான இளம் தலைவர்கள்' என்பது, மொனராகலை மாவட்டத்தின் மதுருகெட்டிய கிராம சேவையாளர் பிரிவில் தேசிய சமாதானப் பேரவையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க (SCORE) திட்டத்தின் மூலம் 2020 பெப்ரவரியில் நடைபெற்ற ஊடாடும் செயலமர்வாகும். வன்முறை மோதலில் இருந்து நிலையான அமைதியைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் ஆற்ற வேண்டிய பங்கை அது அங்கீகரித்துள்ளது.




பெரும்பாலான பங்கேற்பாளர்களுக்கு, செயலமர்வு முற்றிலும் புதிய அனுபவமாக இருந்தது

ஹசித சதுரகே செயலமர்வில் பங்குபற்றிய முப்பத்தாறு பேரில் ஒருவர்: "நேரடியாக, என்னைப் போன்றே இளமையாகத் தோன்றிய வசதிப்படுத்துனர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பேசியது என்னைக் கவர்ந்தது. அதுமட்டுமின்றி, தகவல்தொடர்புகளை எளிதாக்குவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் எப்போதும் கையில் இருந்தார். எங்கள் கவலைகள் மற்றும் உந்துதல்களைப் பற்றி பேச எங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. தமிழ் சகோதரிகள் மற்றும் சகோதரர்களும் நீண்ட நேரம் பேசினர். அவர்கள் சொல்வதை நாங்கள் உன்னிப்பாகக் கேட்டோம், எங்கள் வேறுபாடுகளை ஒரு பிரச்சினையாக மாற்றக்கூடாது என்பதை புரிந்து கொள்ள ஆரம்பித்தோம். அரசியல்வாதிகள், அவர்கள் சொல்வதையும் செய்வதையும் வைத்து எங்களைப் பிரித்ததற்காக நான் குற்றம் சாட்டுகிறேன்" என்று கூறினார்.

இருபத்தி மூன்று வயதான நிஷாமாலி, ஆசிரியையாக தகுதி பெறுவதற்காக தேசிய கல்வியியல் கல்லூரியில் அனுமதிக்காக காத்திருக்கிறார். "சகவாழ்வு என்ற தலைப்பில் உரையாடல்களில் நான் பங்கேற்றது இதுவே முதல் முறை. சிங்கள மக்களைக் கண்டு நாம் கொஞ்சம் பயந்தோம். ஆரம்பத்தில் சற்று பதற்றம் நிலவினாலும் நாளின் முடிவில் வேறுவிதமாக மாறியது. நாங்கள் ஒருவருக்கொருவர் வசதியாக இருந்தோம், அவர்களின் கருத்துக்களைக் கேட்டோம். செயலமர்வு மிகவும் அசாதாரணமான முறையில் நடத்தப்பட்டது - நாங்கள் பெரும்பாலும் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் கற்றுக்கொண்டோம். நாங்கள் சலிப்படையவில்லை, ஆர்வத்துடன் செயல்களில் ஈடுபட்டோம்" என்று அவர் குறிப்பிட்டார்.



சகவாழ்வைப் புரிந்துகொள்வதும் முரண்பாடுகளைத் தீர்ப்பதும் செயலமர்வின் இரண்டு முக்கிய நோக்கங்களாகும்

"பங்கேற்பாளர்கள் குழுக்களை உருவாக்கினர், மேலும் எங்கள் நோக்கத்தை அடைவதற்கு குழுப்பணி முக்கியமானது" என்று துசந்திர விஜயநாதன் கூறுகிறார். "அவர்கள் ஒருவருக்கொருவர் முன்னோக்குகள் மற்றும் உந்துதல்களைப் பகிர்ந்து கொண்டனர் - இது ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கான ஒரு பயிற்சியாகும். பின்னர், ஒரு விளையாட்டின் மூலம், நாங்கள் ஒரு கருத்து வேறுபாட்டை எதிர்கொண்டோம், மேலும் "நீங்கள் ஒரு தொடர்பைப் பார்க்கிறீர்களா...?"

எனும் கேள்வியை எழுப்புவதன் மூலம் அதை எங்கள் தேசிய மோதலுடன் இணைக்க முடிந்தது: பல ஆண்டுகளாக, நிஷாமாலி மற்றும் ஹசித ஆகிய இருவரின் குடும்பங்களும் வாழ்க்கைக்கு முகங்கொடுக்கப் போராடினர் - அவர்களின் பாதிப்புகள் போரினால் மோசமடைந்து அதைத் தாண்டியும் தொடர்ந்தன. நிஷாமாலியின் தந்தை கூலித் தொழிலாளி, அம்மா ஆடைத் தொழிற்சாலை தொழிலாளி. ஹசிதவின் தந்தை முச்சக்கரவண்டி சாரதியாகவும், அவரது தாயார் இனிப்பு விற்பனையாளராகவும் உள்ளனர். ஹசித கடந்த சில வருடங்களாக பஸ் நடத்துனராகவும் பகுதிநேர வேலையாக ஒரு முச்சக்கர வண்டியை ஓட்டியும் வந்துள்ளார். வறுமை என்பது மோதலுக்கு பங்களிக்கும் ஒரு காரணி என்றும் அதன் விளைவு என்றும் அவர் நம்புகிறார். "எங்கள் கிராமம் ஏழ்மையானது. நாம் சமத்துவமின்மை மற்றும் அநீதியை அனுபவிக்கிறோம், அது மோதலை உருவாக்குகிறது. மொனராகலையில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் உள்ள ஏழைகள் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமை என்றால் என்ன - வன்முறை மோதல் என்றால் என்ன என்பதை நாம் நேரடியாக அறிவோம். யுத்தத்தின் போது எமது பிரதேசத்தில் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு இடையில் இடம்பெற்ற சண்டை எனக்கு நினைவிருக்கிறது. இதுபோன்ற பல விஷயங்களை நான் நினைவில் வைத்திருக்கிறேன்".

'சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான இளம் தலைவர்கள்' செயலமர்வில் மோதல் தடுப்பு மற்றும் தீர்வு பற்றிய கலந்துரையாடர்கள் இடம்பெற்றன. சமூக ஒற்றுமை மற்றும் அமைதியை நோக்கி உழைத்தல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களை எதிர்கொள்கின்றனர். மிக முக்கியமாக, செயலமர்வு நட்பை உருவாக்க உதவியது.



ஒருவருக்கொருவர் மொழிகளைப் புரிந்துகொள்வது சகவாழ்வுக்கு முக்கியம் என்று நிஷாமாலி நம்புகிறார்

“இன்று எனக்கு தமிழ் நண்பர்களை விட சிங்கள, முஸ்லிம் நண்பர்களே அதிகம்” என்கிறார் நிஷாமாலி. “நான் சாதாரண தரம் வரை சிங்களத்தைப் படித்தேன் மற்றும் சரளமாக மொழியைப் பேசக்கூடியவள். நாம் ஒருவருக்கொருவர் மொழிகளைப் புரிந்துகொள்வது முக்கியம். இன்னும் சிங்களவர்கள் தமிழ் பேச கற்றுக்கொண்டால் நல்லது. தமிழ் மக்கள் அரச அலுவலகங்களுக்குச் செல்லும்போது, அவர்களுக்கு உதவ போதுமான தமிழ் பேசுபவர்கள் இல்லை என்பது எனக்குத் தெரியும். எனது கற்பித்தல் தகுதியைப் பெற்ற பிறகு, நான் எனது கிராமத்திற்குத் திரும்ப விரும்புகிறேன், ஏனென்றால் எங்கள் பிள்ளைகளுக்கு சரியான கல்வி எந்தளவு தேவை என்பதை நான் அறிவேன்.

“விளையாட்டு மூலம் மக்களை ஒன்றிணைக்க விரும்புகிறேன்” என்கிறார் ஹசித. “எனக்குத் தெரிந்த சிறந்த வழி அதுதான். என்னை விட இளைய இளைஞர்கள் மீதும் எனக்கு அக்கறை உள்ளது. அவர்கள் சிக்கலில் மாட்டிக் கொள்வார்கள் என்று நான் பயப்படுகிறேன். அவர்களை விளையாட்டு நடவடிக்கைகளில் சேர்க்க வேண்டும் என்பதே எனது விருப்பம். நாங்கள் ஏற்கனவே ஒரு விளையாட்டு மைதானத்திற்காக புல் வளர்ந்த நிலத்தை சுத்தம் செய்யத் தொடங்கினோம், ஆனால் சில பெரிய பாறைகளையும் நகர்த்த வேண்டும், அதற்காக நாங்கள் உதவியை நாடுகிறோம். விளையாட்டுக்காக இந்த இடத்தை உருவாக்குவதும் ஒன்றுபடுவதும் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். இந்த வழியில் நாங்கள் ஒரு நல்ல வழியில் ஆக்கிரமிக்கப்பட்டு - முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி பேசுவோம்” என்றார்.



மக்களை தூரப்படுத்துவதில் அரசியல் வகிக்கும் பங்கை ஹசிதா நன்கு அறிந்திருக்கிறார்.

# கடக்கும் எல்லைகள்

## சேருவில சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் மோதலுக்குப் பதிலாக ஒத்துழைப்பைத் தேர்ந்தெடுக்கின்றனர்

1980 ஆம் ஆண்டுகளில் இனக்கலவரம் தீவிரமடைந்த நிலையில், இலங்கையில் 'எல்லைக் கிராமம்' என்ற சொல் பொதுவாகப் பயன்படுத்தத் தொடங்கியது. எல்லைக் கிராமங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளன அல்லது வேறுவிதமாகக் கூறினால், ஒரு காலத்தில் இராணுவம் மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடையிலான பிளவுக் கோடுகளாக இருந்தன.

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பிரிவு இன வேறுபாட்டிற்கு உட்பட்ட 16 எல்லைக் கிராமங்களை உள்ளடக்கியது. உதாரணமாக நாவக்கேணிக்காடு முற்றிலும் முஸ்லிம் கிராமம், சுமேதங்கரபுர சிங்கள கிராமம். சமீபத்திய ஆண்டுகளில், இரண்டு அண்டைக் கிராமங்கள் பெருகிய முறையில் முரண்பட்டன.



நாவக்கேணிக்காடு பகுதியில் மக்கள் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பாளர்கள்



சுமேதங்கரபுரவாசிகள் முக்கியமாக தங்கள் நிலத்தில் விவசாயம் செய்கிறார்கள்

"இன்று, சேருவில பிரதேசத்தின் சனத்தொகையில் 60% ஆனோர் சிங்களவர்கள், ஆனால் நாவக்கேணிக்காட்டில் 1,000 குடும்பங்களும், சுமேதங்கரபுரத்தில் 200க்கும் குறைவான குடும்பங்களும் உள்ளன" என தேசிய சமாதானப் பேரவை மூலம் அமுல்படுத்தப்பட்ட சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க (SCORE) திட்டத்தின் சமூக இணைப்பாளர் பீ. நிரோஷா கூறுகிறார். "நாவக்கேணிக்காடு குடியிருப்பாளர்கள் கால்நடைகளை வளர்க்கின்றனர் மற்றும் சுமேதங்கரபுரவாசிகள் தங்கள் நிலத்தில் பயிர் செய்கிறார்கள். முஸ்லிம் கிராமத்தில் இருந்து கால்நடைகள், தீவனம் பயிரிடுவதற்கு எந்த நிலமும் இல்லாததால், உணவுக்காக அரிதான சிங்களக் கிராமத்தின் நிலத்திற்குத் திரியத் தொடங்கியபோது, பிரச்சினை துளிர்விடுவதை நாங்கள் அறிந்தோம்."

1948 இல் பிரித்தானிய ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, திருகோணமலை மாவட்டம் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுடன் இணைக்கப்பட்ட அரசாங்க காலனித்துவ முயற்சிகளுக்கு உட்பட்டது. வரலாற்று ரீதியாக, திருகோணமலை ஒரு காலத்தில் தமிழ் பேசும் பிரதேசமாக இருந்தது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிங்களவர்களை விட அதிகமாக இருந்தனர். ஆனால் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் நிலக் குடியேற்றக் கொள்கைகளால் மாகாணத்தின் மக்கள்தொகை மாறத் தொடங்கியது, அவர்கள் போரின் போது இந்தப் பகுதிகளை 'தடுப்பு மண்டலங்களாக" இராணுவமயமாக்கினர். எனவே இப்பகுதியில் உள்ள பெரும்பாலான சிங்களவர்கள் ஒப்பீட்டளவில் சமீபத்தில் வந்தவர்களாவர்.

சுமேதங்கராபுர குடியேற்றம் 1984 இல் உருவாக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் நெல் நிலமும் ஒரு ஹெக்டெயர் உலர் நிலமும் அரசாங்கத்திடமிருந்து கிடைத்தன. ஆனால் போர் உக்கிரமடைந்த நிலையில் மக்கள் பெருமளவில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கினர், அவர்களில் சிலர் மட்டுமே போர் முடிந்ததும் திரும்பினர். "நான் 2009 முதல் கிராமத்தில் வசிக்கிறேன். கால்நடைகள் எங்கள் பயிர்களை அழிப்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. நம்மில் பெரும்பாலோர் மிகக் குறைவாகவே சம்பாதிக்கிறோம், இழந்த வருமானத்தை ஈடுகட்ட முடியாது,"என்று கூறுகிறார் 30 வயதான நயோமி நிசன்சலா, இவர் இரண்டு பெண் குழந்தைகளின் தாயார், அவரது கணவர் இராணுவத்தில் பணியாற்றுகிறார். "நாவக்கேணிக்காட்டில் உள்ள அனைத்து மக்களும் பொறுப்பாளிகள் அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் அவர்களின் மொழியைப் பேசுவதில்லை, அவர்களின் கலாசாரம் எங்களுக்குத் தெரியாது, நாங்கள் அவர்களை தனி நபர்களாகப் பார்க்காமல் ஒரு குழுவாகப் பார்க்கிறோம். எனவே முழு கிராமமும் பொறுப்பு என்று நாங்கள் குற்றம் சாட்டினோம்."





புரிந்துணர்வு இல்லாததால் மோதல்கள் ஏற்படுகின்றன என்பதை நயோமி நிசன்சலா ஒப்புக்கொள்கிறார்

"எங்கள் பகுதியில் இருந்து கால்நடைகள் அவர்களின் பகுதிக்கு வழிதவறி வருவது நடந்தது" என்கிறார் நாவக்கேணிக்காடு பகுதியைச் சேர்ந்த கிராமத்தின் முன்னாள் கிராம அலுவலராகிய. எம்.எஸ். உபைத்துல்லா குறிப்பிட்டார். "ஒருபுறம், மக்கள் தங்கள் கால்நடைகளுக்கு உணவளிக்க வேண்டும், மறுபுறம், மக்கள் தங்கள் பயிர்களை பாதுகாக்க வேண்டும். மிகக் குறைவான மேய்ச்சல் நிலமே எங்களிடம் உள்ளது, ஆனால் சுமேதங்கரபுர வாசிகள் வாழ்வாதாரத்திற்காக போராடுகிறார்கள் என்பதையும், அவர்களின் பயிர்கள் அழிக்கப்பட்டால் அது அவர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்பதையும் நான் அறிவேன். நாங்கள் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண விரும்பினோம், அதைப் பற்றிய கலந்துரையாடல்களைத் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

2019 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், SCORE ஆனது நாவக்கேணிக்காடு மற்றும் சுமேதங்கரபுர வாசிகளுக்கு "கடந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கும் அவர்களின் பிரச்சினைகளை பச்சாதாபத்துடனும் இரக்கத்துடனும் வன்முறையற்ற முறையில் கூட்டாகத் தீர்ப்பதற்கும்" சுயபரிசோதனைக்கான தனி ஒரு நாள் உரையாடல்கள் மற்றும் பயிற்சிகளை வசதிப்படுத்தியது. சமூக உறுப்பினர்கள் - வெவ்வேறு வயது மற்றும்

தொழில்களில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் மற்றும் கிராமத் தலைவர்கள் - கூட்டங்களில் பங்கேற்றனர். பிரதேச செயலாளர் உட்பட அரச உத்தியோகத்தர்களுக்கு கலந்துரையாடல்கள், தீர்மானங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில், பங்கேற்பாளர்கள் போர் தொடர்பான வன்முறையின் நினைவுகளைப் பிரதிபலித்தனர். குழுக்களாகப் பிரிந்து, மக்கள் தங்கள் தனிப்பட்ட மற்றும் கூட்டு அனுபவங்களைப் பற்றி கலந்துரையாடி, கண்டுபிடிப்புகளை கூட்டத்தில் முன்வைத்தனர். அதனைத் தொடர்ந்து வளவாளரினால் கலந்துரையாடல் இடம்பெற்றது. பின்னர், பிற சமூகங்கள் அனுபவிக்கும் வன்முறை மற்றும் இழப்பை வெளிப்படுத்தும் பல காணொளிகள் காட்டப்பட்டன, அதைத் தொடர்ந்து பங்கேற்பாளர்கள் மற்றவர்களின் கதைகளுக்கு தங்கள் உணர்ச்சிபூர்வமான பதில்களைப் பகிர்ந்து கொண்டனர். வன்முறை மோதல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியம், பிரச்சனைகளைத் தீர்க்க வன்முறையை நாடுவதன் எதிர்மறையான விளைவுகள் மற்றும் சர்ச்சைகளைத் தீர்க்க வன்முறையற்ற அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் பற்றிய உரையாடலுக்கு இது வழிவகுத்தது.

அடுத்த அமர்வில், பங்கேற்பாளர்கள் மீண்டும் குழுக்களாகப் பிரிந்து, மோதலின் கதையைக் குறிக்கும் அட்டைகளின் தொகுப்பு வழங்கப்பட்டது. அவற்றை வரிசையாக வைக்குமாறும், ஒவ்வொரு அட்டைக்கும் ஒரே வார்த்தையில் தலைப்பிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன் விளைவாக ஒரு மோதல் எப்படி வன்முறையாக மாறும் மற்றும் வித்தியாசமாக அணுகினால் அது எப்படி மாறுபட்ட விளைவை ஏற்படுத்தும் என்பது பற்றிய கலந்துரையாடல் ஏற்பட்டது.

ஒவ்வொரு சமூகமும் அதன் பிறகு தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினையில் கவனம் செலுத்தியது. நாவாக்கேணிக்காடு பங்கேற்பாளர்கள் இரு சமூகங்களுக்கிடையிலான தற்போதைய முரண்பாடுகளுக்கு பங்களித்த பல காரணிகளை கருத்தில் கொண்டனர். கிராமத்திற்குச் சொந்தமான பெரும் நிலப்பரப்பு அப்பகுதியில் உள்ள இரண்டு பிரதான விகாரைகளான வெல்கம் வெஹெர மற்றும் சேருவாவில ரஜமஹா விகாரையால் கையகப்படுத்தப்பட்டதை அவர்கள் நினைவு கூர்ந்தனர். மேலும், சுமேதங்கரபுரவில் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படாத நிலங்கள் நிறைய இருந்ததால், விலங்குகள் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தியிருப்பின் அர்த்தமுள்ளதாக இருந்திருக்கும். ஆனால், விலங்குகள் சுமேதங்கரபுரவிற்குச் சென்றதால் பயிர்கள் நாசமாயின, அது சிங்கள விவசாயிகளிடமிருந்தான கடுமையான வார்த்தைகளையும் அச்சுறுத்தல்களையும் தூண்டியது என்ற யதார்த்தத்தை அவர்கள் உணர்ந்தனர்.

இரண்டு கிராம மக்களுக்கும் இடையில் உள்ள மோசமான தொடர்பாடல் குறித்தும் மக்கள் பேசினர், இளைய குடிமக்கள் தமிழில் பேச இயலாமை அவர்களுக்கு இடையே இடைவெளியை ஏற்படுத்தியதாக சுட்டிக்காட்டினர். “முன்பு, மக்கள் நம் மொழியைப் பேசுவார்கள். அவர்கள் சிங்கள-பௌத்தர்களாக இருந்த போதிலும், அவர்கள் எமது கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளை புரிந்துகொண்டிருந்தனர்” என செய்பது மொகமது ஹபீஸ் குறிப்பிட்டார்.

சுமேதங்கரபுரயில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு, முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களைப் பற்றியும், முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய சந்தேகம் மற்றும் அமைதியின்மையைப் பற்றியும் மக்கள் பேசினர். இருப்பினும், சில பங்கேற்பாளர்கள் நாவக்கேணிக்காடு குடியிருப்பாளர்களுடன் உருவாக்கப்பட்ட நட்பு மற்றும் நம்பிக்கையைப் பற்றி பேசினர். “நானும் திரு. ஃபைசலும் நல்ல நண்பர்கள். நான் அவரில் நம்பிக்கை வைக்கலாம்” எனவும், “அவர் பிரதேச சபை உறுப்பினர். எனக்கு ஏதாவது பிரச்சினை என்றால், நான் எப்போதும் அவரிடம் செல்வேன்” எனவும் செனரத் பண்டார கூறினார்.

சுமேதங்கரபுரயில் உள்ள ஒற்றுமையின்மை மற்றும் உள்ளக முரண்பாடுகள் குறித்தும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது, இது அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை கடினமாக்கியது, மேலும் பல குடியிருப்பாளர்கள் தங்கள் பயன்படுத்தப்படாத நிலத்தை கால்நடை மேய்ச்சலுக்காக வாடகைக்கு விட்டதையும் குறிப்பிட்டனர். இந்த கால்நடைகளும் இந்த வேலி இல்லாத நிலங்களில் இருந்து, அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களை நோக்கி வழிதவறி வந்தன.

வழிதவறி வரும் கால்நடைகள் விவகாரத்தில் அரசின் தலையீட்டின் முக்கியத்துவத்தையும் மக்கள் உணர்ந்தனர். நயோமி நிசன்சலா ஒரு மோதலை ஏற்படுத்தக் கூடிய தீர்வை முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது: அவர் “நாவக்கேணிக்காடு மக்களுக்கு அவர்களின் கால்நடைகளுக்கு உணவளிக்க அரசாங்கம் சிறிது நிலத்தை வழங்கினால், எங்கள் பயிர்ச்செய்கைகள் பாதுகாப்பாக இருக்கும். சகிப்புத்தன்மையின் அர்த்தம் நம்மை விட இவர்களுக்குத் தெரியும் என்றுதான் சொல்ல வேண்டும். அதை நாம் பாராட்டவும் மதிக்கவும் வேண்டும். இல்லையெனில், நிலைமை மிகவும் மோசமாக இருந்திருக்கும்” என்று கூறினார்.

நாவக்கேணிக்காடு மற்றும் சுமேதங்கரபுரவில் நடந்த உரையாடல்களின் முடிவில், இரு சமூகத்தினரும் ஒரு கூட்டுக் கலந்துரையாடலுக்குத் தயாராக இருந்தனர், இது 2019 டிசம்பரில் நடைபெற்றது. பங்கேற்பாளர்கள் கால்நடை தீவனத்திற்காக ஒதுக்கக்கூடிய நிலத்தை அடையாளம் காணவும், இது குறித்து அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடவும் முடிவு செய்தனர். கால்நடைகள் இன்னும் வழிதவறி பயிர்களை உட்கொண்டால், கால்நடை உரிமையாளர்கள் நஷ்டத்தை ஈடுகட்டுவது என்றும் உடன்பாடு ஏற்பட்டது.








ஒரு செயல்முறையின் மூலம் இரண்டு சமூகங்களையும் ஒன்றிணைக்க SCORE உதவியது அது கலந்துரையாடலின் அடிப்படையில் அமைந்ததே தவிர எதிர்ப்பு அல்ல

“இந்த கலந்துரையாடலுக்குப் பிறகு, இது ஒரு பெரிய பிரச்சினை இல்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம்,” என்கிறார் எஸ். எம். உபைதுல்லா. “அண்டை கிராமத்தில் நாம் தீர்க்க வேண்டிய சில பிரச்சினைகள் உள்ளன, மேலும் நிலப் பிரச்சினைகள் போன்ற அரசாங்க அதிகாரிகளுடன் நாம் தீர்க்க வேண்டிய சில பிரச்சினைகள் உள்ளன. இறுதியில், நாம் விரும்புவது அமைதியான வாழ்க்கையை வாழ வேண்டும். கால்நடைகள் நடமாடுவதற்கான பாதைகளை அமைக்கவும் முடிவு செய்துள்ளோம். நாவக்கேணிக்காடு மற்றும் சுமேதங்கராபுரவிற்கு இடையே உள்ள இடத்தை மாற்றி. எங்கள் இரு கிராமங்களும் மாதாந்த கூட்டங்களை நடத்தத் தொடங்கின - ஆனால் அவற்றை எங்களால் தொடர்ந்து தொடர முடியவில்லை.”



கலந்துரையாடல் இல்லாத போது பிரச்சனைகள் பெரிதுபடுத்தப்படலாம் அல்லது மோசமாக்கப்படலாம் என்கிறார் எம். எஸ். உபைதுல்லா

எவ்வாறாயினும், அவர்கள் சரியான திசையில் பயணிப்பதாக செய்பது முகமது ஹபீஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். "இப்பிரச்சினைக்குத் தீர்வு காண கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகக் குழு இதற்கு முன்னர் மத்தியஸ்தம் செய்ய முயற்சித்த போதிலும், அவர்களின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. இந்த நிகழ்ச்சி ஒரு திருப்புமுனையாக அமைந்தது. எங்கள் பொதுவான பிரச்சனைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கு ஒரு பகிரப்பட்ட தளத்தை உருவாக்கினோம்."

சுமேதங்கரபுரத்தைச் சேர்ந்த செனரத் பண்டார மக்களை தூரமாக்கும் தவறான கருத்துக்களை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பை காண்கிறார். "மக்களை தவறாக வழிநடத்துவதன் மூலம் எந்தவொரு பிரச்சினையையும் இனப்பிரச்சினையாக மாற்ற முயற்சிக்கும் முஸ்லிம் மற்றும் சிங்கள தலைவர்கள் இருசாரரும் உள்ளனர். அண்டை வீட்டாரை எதிரிகளாக பார்க்கும்படி மக்களை வற்புறுத்துகிறார்கள். இந்த அவநம்பிக்கையையும் வெறுப்பையும் தோற்கடிக்க என்னைப் போன்றவர்களுடன், அதிகாரம் இல்லாதவர்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன். மனிதநேயம் ஒரு சக்திவாய்ந்த விஷயம். இனவெறியை எதிர்த்துப் போராட இதுவே சிறந்த வழியாகும்" என ஒப்புக்கொள்கின்றார்.

சமூக இணைப்பாளர் பி.நிரோஷா ஒப்புக்கொள்கிறார். "மக்கள் ஈர்க்கக்கூடியவர்கள் மற்றும் அவர்கள் கையாளப்படலாம். யுத்தத்தின் பின்னர் இப்பகுதிக்கு இடம்பெயர்ந்த பல இளைஞர்கள் தங்களுக்குள் மிகுந்த கோபத்தைக் கொண்டுள்ளனர். வேறு எங்கும் வேலை கிடைக்காததால் இங்கு வந்துள்ளனர். பழைய தலைமுறையினர் செய்வது போல் அவர்கள் சகவாழ்வை புரிந்து கொள்ளவில்லை. உதாரணமாக, சேருவாவில ரஜமஹா விகாரை மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய போது, பிரதம பிக்குவை பாதுகாத்தவர்கள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது" என்று அவர் குறிப்பிட்டார்.



திட்டத்தின் சமூக இணைப்பாளர் பீ நிரோஷனி, சகவாழ்வின் மதிப்பைப் புரிந்துகொள்ள கடந்த கால அனுபவங்களைப் பற்றி மக்களுக்கு சிறந்த தகவல் வழங்கப்பட வேண்டும் என்று நம்புகிறார்

# உரையாடல், மோதல் அல்ல

இலங்கையின் வடமாகாணத்தின் வடக்கில் அமைந்துள்ள வலிகாமம் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு டீ.தயாநாதன் குறிப்பிடுகையில், "சகவாழ்வின் ஒரு முக்கிய அங்கம் வன்முறையற்ற தொடர்பாடல் ஆகும். எவ்வாறாயினும், இந்த கருத்து தனக்கு புதியது என்று ஒப்புக்கொள்கிறார், அவர் அண்மைக்காலம் வரை அதைப் பற்றி யோசிக்கவில்லை அல்லது கேள்விப்பட்டதில்லை. "இந்தப் விடயத்தில் நாங்கள் செயலமர்வுகளை நடத்தியபோது, மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நானும் அதன் அர்த்தம் என்னவென்று புரிந்துகொள்ள ஆரம்பித்தோம். நாளின் முடிவில், பச்சாதாபம் மற்றும் மக்களுடன் தொடர்புகொள்வதற்கான நமது திறனை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை நாம் காணலாம். வன்முறை மோதல்கள் இல்லாத சமூகத்திற்கு இது ஒரு நல்ல அடித்தளம் என்று நான் நினைக்கிறேன்" என்றார்.



கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பச்சாதாபத்துடன் தொடர்புகொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிக் கலந்துரையாடினர்

1980 களில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வலிகாமம் பிரதேச மக்களுக்கு வன்முறை மோதல்கள் அன்றாட நிகழ்வாகும். இராணுவ முகாம்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் உயிர்நாடிகளைப் பாதுகாப்பதற்காக அதன் நிலத்தின் பெரும்பகுதி "உயர் பாதுகாப்பு வலயமாக" வரையறுக்கப்பட்டபோது போரின் தாக்கம் இன்னும் கடுமையானதாக மாறியது - ஆயிரக்கணக்கான மக்களை இடம்பெயர்த்தது.


1990 களின் முற்பகுதியில் இருந்து, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பொது மற்றும் தனியார் சொத்துக்கள் மீது இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். மக்கள் அகதிகள் முகாம்கள், தற்காலிக தங்குமிடங்கள் அல்லது தொலைதூர இடங்களில் உறவினர்களுடன் - நிச்சயமற்ற மற்றும் உறுதியற்ற நிலையில் வாழ்ந்தனர்.



பல வருடங்கள் இடம்பெயர்ந்த பிறகு மக்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பினர்

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த போது வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த 6000 ஏக்கருக்கும் அதிகமான பகுதிகளை பொதுமக்களின் பாவனைக்காக அரசாங்கம் விடுவிக்க ஆரம்பித்தது. பல தசாப்தங்களாக, தங்களுக்கு நுழைவதற்கு அனுமதியற்ற தங்கள் மூதாதையர் நிலங்களுக்கு மக்கள் படிப்படியாக திரும்பிச் செல்லத் தொடங்கினர். “சிறுவர்களாகப் பிரிந்தவர்கள் தங்கள் சொந்தக் பிள்ளைகளுடன் பெரியவர்களாகத் திரும்பிக் கொண்டிருந்தனர்” என்கிறார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அபிவிருத்திப் பணியாளர் பேரின்பநாயகம் ரொனிபஸ். “இது ஒரு சிக்கலான சூழ்நிலையாகும்.”

சில குடும்பங்கள் தங்களுடைய அசல் வீடுகளை சரிசெய்தன அல்லது புதிதாக அவற்றை மீண்டும் கட்டியெழுப்பியுள்ளன. மற்றவர்கள் அரச காணியில், அப்பகுதியில் வேறு இடங்களில், அரசாங்கத்தால் - அறிமுகமில்லாத சுற்றுப்புறங்களை உருவாக்கி, மீள்குடியேற்றம் தொடர்பான பொதுவான பிரச்சனைகளை அதிகப்படுத்தினர். இந்தக் குடும்பங்களின் வாழ்வில் இந்தப் புதிய கட்டத்தின் ஆரம்பம் குறிப்பாகச் சங்கடமான ஒன்றாக இருந்தது.



“வலிகாமம் நகுலேஸ்வரம் கிராமத்திற்குத் திரும்பிய மக்கள் இப்போது அயலவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் ஒருவரையொருவர் ஒதுக்கி வைக்கிறார்கள்,” என்கிறார் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்ஷா கிருஷ்ணமேனன். “அவர்கள் சாதியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர். இது மேற்பரப்பிற்கு கீழே உள்ள ஒரு பிரச்சினை. வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு கோயில்களில் வழிபடுகிறார்கள். அவர்கள் கலக்க மாட்டார்கள், பழக மாட்டார்கள், தொடர்பு கொள்ள மாட்டார்கள் - தவறான புரிதல்கள் மற்றும் மோதல்கள் தவிர்க்க முடியாதவை. வன்முறையற்ற தொடர்பு அவர்களுக்கு அறிமுகப்படுத்த ஒரு நல்ல விஷயமாக இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும்.”

மீள்குடியேற்ற செயல்முறை மக்களிடையே மோதலை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது என அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்ஷா கிருஷ்ணமேனன் கவலை தெரிவித்துள்ளார்



பேரின்பநாயகம் ரொனிபஸ் வன்முறையற்ற தொடர்பாடல் பற்றிய பாடசாலைச் செயலமர்வுகளை ஒருங்கிணைத்தார்

தேசிய சமாதானப் பேரவையினால் (NPC) நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க (SCORE) திட்டமானது, வலிகாமத்தில் உள்ள மூன்று பாடசாலைகளில் வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிலரங்குகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தனித்தனியான செயலமர்வுகளுடன் நடத்த தீர்மானித்துள்ளது. “வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) என்பது ஒரு புதிய மொழி. இது மக்களிடையே ஆரோக்கியமான உறவுகளை உருவாக்க உதவுகிறது. இது விமர்சனம் மற்றும் பழிக்கு ஆளாகாமல் கேட்பது மற்றும் பேசுவதாகும். கருத்து வேறுபாடுகளை அதிகரிக்காமல் நமது தேவைகளை உணர்ந்து கொள்வதும் ஆகும். அடிப்படையில், இது மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று,” என்று செயற்பாடுகளை ஒருங்கிணைத்த பேரின்பநாயகம் ரொனிபஸ் கூறுகிறார். “சமூகங்களுக்குள் சகவாழ்வு மற்றும் வெளியில் உள்ள மக்களுடன் நல்லிணக்கத்தை செயல்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த இடத்தை உருவாக்க உதவும் என்பதை நாங்கள் அறிவோம்.”

தகவல்தொடர்பு இல்லாமை, தவறான தகவல்தொடர்பு மற்றும் தவறான புரிதல் ஆகியவை கருத்து வேறுபாடு மற்றும் மோதலை நிலைநிறுத்தும் மற்றும் தீவிரப்படுத்தும் சூழ்நிலைகளில் சமாதானத்தை கட்டியெழுப்புவது ஒரு சவாலாகிறது. வன்முறையற்ற தொடர்பாடல் என்பது உளவியலாளரும் மத்தியஸ்தருமான மார்ஷல் ரோசன்பேர்க் அவர்களால் பச்சாதாபத்தை வளர்ப்பதற்கும், வேறுபாடுகளைக் கடந்து மக்களுடன் இணைவதற்கும் ஒரு கருவியாக உருவாக்கப்பட்டது. முரண்படும் நபர்கள் மற்றவர்களின் முன்னோக்குகள், உணர்வுகள், தேவைகள் மற்றும் கோரிக்கைகளைப் புரிந்துகொள்ள உதவுவதற்கு இது மத்தியஸ்த முயற்சிகளை எளிதாக்குகிறது - வன்முறையை நாடாமல் மற்றும் விரோதமான உறவுகளை உருவாக்காமல் அவர்களின் வேறுபாடுகளைத் தீர்க்கிறது.






மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நடைபெற்றன

"வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) பற்றிய செயலமர்வானது சிறுவர்களுக்கானது மட்டுமல்ல. ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்," என்கிறார் இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவி பிரியா ஜேக்கப். "பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ அல்லது பொது இடத்திலோ நாம் எவ்வாறு தொடர்பு கொள்கிறோம் என்பதை இப்போது நாங்கள் எப்போதும் அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலைக் கூட்டத்தில், அகிம்சையின் முக்கியத்துவத்தையும், கலந்துரையாட வேண்டியதன் அவசியத்தையும் நாங்கள் பிரதிபலிக்கிறோம். செயலமர்வின் எதிர்பாராத விளைவு என்னவென்றால், ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொள்கிறார்கள்."



வன்முறையற்ற தொடர்பாடல் என்பது ஒட்டுமொத்த பாடசாலைச் சமூகமும் இதைப் பற்றிப் பேசும், சிந்திக்கும் ஏதோ ஒன்று என்று பிரியா ஜேக்கப் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்

“நாம் பல்வேறு வகையான வன்முறைகளை தொடர்ந்து எதிர்கொள்ளும் ஒரு சமூகம். இதற்கு முன்பு நாங்கள் இதுவரை கலந்துரையாடாத இந்த விஷயங்களைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பாக இந்த செயலமர்வைப் பயன்படுத்தினோம்,” என்கிறார் ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவராஜா கௌரிதரன். “இந்த தலைமுறை மோதலைத் தீர்க்க வன்முறையில் ஈடுபடாமல் இருப்பது முக்கியம். நாம் இணைந்து வாழ வேண்டும். கொவிட் -19 காரணமாக பாடசாலை நீண்ட காலமாக மூடப்பட்டபோது, பிள்ளைகள் தங்கள் வீடுகளில் அடைத்து வைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த கடினமான காலங்களில் அவர்கள் தங்கள் வீடுகளில் வன்முறையற்ற தகவல்தொடர்புகளை கடைப்பிடித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.”

ஆசிரியையாகிய வசந்தகுமாரி ராமச்சந்திரன், இது உண்மையாகவே நடந்தது என்பதை உறுதிப்படுத்துகிறார்: “குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, வன்முறையற்ற தொடர்பு என்ற கருத்தை நம் வீடுகளிலும் பயன்படுத்த முடிந்தது. இந்த விஷயத்தைப் பற்றி கலந்துரையாடுவதை செயலமர்வுடன் நாங்கள் நிறுத்தவில்லை. அதை தொடர்ந்து கலந்துரையாடி வருகிறோம். பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ எங்கிருந்தாலும், புண்படுத்தும் வார்த்தைகள் வெளிப்படும் போதெல்லாம், நான் அதை கவனத்திற்குக் கொண்டுவருவேன். வன்முறையற்ற தொடர்பாடலின் (NVC); முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடும் ஒரே ஆசிரியர் நான் அல்ல என்பது எனக்குத் தெரியும். வன்முறையற்ற தகவல்தொடர்பு பற்றிய சுவரொட்டிகளை உருவாக்கி காட்சிப்படுத்துவதன் மூலம் மாணவர்கள் 2019 ஆம் ஆண்டில் சமாதான வாரத்தைக் கொண்டாடினர்.




ஆசிரியை வசந்தகுமாரி ராமச்சந்திரன் தனது குடும்பத்தினருடனும் வன்முறையற்ற தொடர்பாடல் குறித்து கலந்துரையாடினார்



‘உரையாடல், மோதல் அல்ல’ என்று ஒரு வகுப்பறையில் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது. ”மாணவர்கள் கற்றுக்கொண்டதை இது தெளிவாகக் காட்டுகிறது” என்று அதிபர் திரு. தயாநாதன் குறிப்பிடுகிறார்.

டீ. தயாநாதன், அதிபர், பாடசாலையில் இவ்விடயம் பற்றிய பயிலரங்குகளை அதிக அளவில் நடத்த விரும்புகின்றார்




வன்முறையற்ற தொடர்பாடல் என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் வகுப்பறைகளில் நிரந்தர அம்சங்களாக மாறிவிட்டன

## "வன்முறையினை நிராகரித்தல்"

முச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கி அக்கம்பக்கத்தில் ஒரு தெரு நாடக நிகழ்ச்சியை அறிவிக்கிறது. சிறுவர்கள் கலந்து கொள்ள குறிப்பாக ஊக்குவிக்கப்படுகிறார்கள் - நாடகம் தொடங்கும் முன் அவர்கள் செயலாற்றல் குழுவுடன் "அமைதியை கட்டியெழுப்பும்" விளையாட்டுகளில் பங்கேற்பார்கள். பார்வையாளர்களின் அனைத்து உறுப்பினர்களும் பின்வரும் நாடகத்தில் ஈடுபட அழைக்கப்படுகிறார்கள், இது செயலாற்றல் மற்றும் அதன் செய்தி பற்றிய ஒரு சிறிய கலந்துரையாடலுடன் முடிவடையும்.



SCORE பிளவுபட்ட சமூகங்கள் ஒன்றுபடுவதற்கான முக்கியமான தேவையை நோக்கிய ஒரு சமூக தொடர்பு செயல்முறையாக தெரு நாடகத்தைப் பயன்படுத்தியது

செம்முகம் நிகழ்ச்சிக் குழுவினால் 2019 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்ற தலைப்பில் வீதி நாடகத் தொடர் நடத்தப்பட்டது. இது தேசிய சமாதானப் பேரவையால் செயல்படுத்தப்பட்ட SCORE திட்டத்தின் முன்னெடுப்பாகும். "என்னைப் பொறுத்தவரை, நாடகம் இயலாதவர்களின் சார்பாக குரல் எழுப்பும் ஒரு வழியாகும்," என்கிறார் குழுவின் தலைவராகிய 46 வயதாகும் சத்தியசீலன், "ஒவ்வொரு நாடகமும் ஒருவித மோதலைச் சுற்றியே சுழல்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.



சத்தியசீலன் 2004 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் அனுபவம் வாய்ந்த நாடகக் கலைஞர்களின் கீழ் நாடகம் பயின்று வருகிறார். ஆனால் இந்த விடயத்தில் அவருக்கு இருந்த ஆர்வம் இன்னும் பின்னோக்கிச் செல்கிறது: "நான் ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே எனக்கு நடனம், ஓவியம், இசை, நாடகம் ஆகிய கலைகளில் ஆர்வம் இருந்தது. நானும் தீவிர வாசகனாக இருந்தேன். இசைக்கலைஞரும் புல்லாங்குழல் கலைஞருமாகிய என் தந்தை என் மீது செல்வாக்குச் செலுத்தினார். எனக்கு 16 வயதாக இருந்தபோதும், போர் உக்கிரமாக இருந்தபோதும் - புலிகள்தான் நாடகத்தைப் பயன்படுத்தி மக்களைத் தம்மைச் சுற்றி அணிதிரட்டினர். இப்போது நாம் ஒரு வித்தியாசமான செய்தியை எடுத்துச் செல்கிறோம். நாடகத்தின் மூலம், நீங்கள் தெளிவாக அடையாளம் காணக்கூடிய செய்திகளை எடுத்துச் செல்ல முடியும்."

ஆனாலும், அது எளிதான செயல் அல்ல என்பதை சத்தியசீலன் ஒப்புக்கொண்டார். "அமைதியைப் பற்றி ஒரு நாடகத்தை உருவாக்குவது எப்போதுமே சவாலாக இருக்கிறது. அவ்வளவு சிக்கலான பிரச்சினை இது. பிரச்சினை என்னவென்றால், இந்தப் பகுதிகளில் உள்ள பலருக்கு இன்னும் அமைதியை அடைவதில் அதிக நம்பிக்கை இல்லை. மோதல்கள் தொடரும் என்றும் மீண்டும் சண்டை வரும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். அப்படிப்பட்ட சூழலில் அமைதியைப் பற்றி பேசுவது கடினம்."

பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும் மோதலுக்குப் பிந்தைய சூழ்நிலையில் சகவாழ்வு மற்றும் சமாதானத்தின் கருப்பொருளை நாடகமாக்குவது சிக்கலாக இருக்கலாம் என்கிறார் சத்தியசீலன்

இருப்பினும், சமகால வாழ்க்கை அனுபவங்களை வரைந்து - நாடகம் மூலம் சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளை ஆதரித்து அவர் தொடர்ந்து வெற்றி பெறுகிறார். "தேசிய சமாதான பேரவையைச் சந்திப்பது இந்த பயணத்தின் ஒரு பகுதியாகும். கதைவசனம் எழுதுவதற்கு முன் நாங்கள் நீண்ட உரையாடல்களை நடத்துகிறோம். அவற்றில் ஒன்றில், எங்கள் கருத்தை ஓரளவு மறைமுகமாகச் சொல்ல முடிவு செய்தோம். இது விளையாடும் சிறுவர்களைப் பற்றியது, பெரியவர்களின் குறுக்கீட்டால் வன்முறையாக மாறும் ஒரு அப்பாவி மற்றும் பாதிப்பில்லாத விளையாட்டு. நிலத்தை அணுகுவதில் ஏற்படும் மோதல் - கருத்து வேறுபாடு எப்படி மோதலாக மாறி பின்னர் வன்முறையாக மாறுகிறது - மிக நீண்ட காலத்திற்கு முன்பு ஒரு தேசமாக நாம் அனுபவித்ததைப் போலவே இதுவும் ஒரு கதை. 'உண்மையில் நாம் ஏன் சண்டையிட ஆரம்பித்தோம்?' என்று பார்வையாளர்களை ஆச்சரியப்பட வைக்கிறோம் என்று நான் நம்புகிறேன், இது வன்முறையை நிராகரிப்பதாகும்."





ஒத்திகையில் செம்முகம் நிகழ்ச்சிக் குழு

ஆனால் அவர் எழுதிய அனைத்து நாடகங்களும் ஒரு யதார்த்தத்தை, ஒரு உண்மையை, ஒரு பாடத்தை எடுத்துச் சொல்ல, உருவகமாகவோ, குறியீடாகவோ மாறுவதில்லை. "நாங்கள் சமீபத்தில் மனச்சிறை அல்லது சிறைப்பட்ட இதயங்கள் என்ற நாடகத்தை நடத்தினோம்," என்கிறார் சத்தியசீலன். "இது விடுதலைப் புலிகளின் பெண் போராளியைப் பற்றிய கதை. அவள் இன்று வவுனியாவில் தனியாக வசிக்கிறாள். போரின் போது பலர் அவளை மரியாதையுடன் நடத்தினார்கள். அந்த உறுதிமொழி இப்போது அவளிடம் இல்லை. அவள் இப்போது ஆயுதம் ஏந்தவில்லை, யாரும் அவளை கவனிக்கவில்லை. நாங்கள் அவளைப் பற்றி பேசினோம். நாங்கள் மிகவும் நேரடியாக நடந்துகொண்டோம்".

செம்முகம் நிகழ்ச்சிக் குழுவின் உறுப்பினரான ஹிரித்யா அருணவராசா வவுனியாவைச் சேர்ந்தவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நாடகம் மற்றும் நாடகக் கல்வி பயின்று வரும் அவர், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களைப் பற்றி அறிந்துகொள்ளக் கிடைத்ததைத் தாம் பெற்ற அதிர்ஷ்டமாகக் கருதுகிறார்: "சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிலரங்குகளிலும், எமது சிங்கள சகோதர சகோதரிகளுடன் நாடக நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டேன். . நான் அதை மிகவும் ரசித்தேன்." இருப்பினும், அவளுடைய முன்னுரிமை ஆசிரியராக வேண்டும். "நான் ஆசிரியரானவுடன், எனது அனுபவங்களையும் கற்றலையும் எனது மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வேன். அவர்கள் அடுத்த தலைமுறை இந்த செய்திகளை அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும். பிற கலாச்சாரங்களை ஏற்றுக்கொள்வதையும், வெவ்வேறு கண்ணோட்டங்களுக்கு மதிப்பளிப்பதையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். நீங்கள் சிறு குழந்தையாக இருக்கும்போது, நீங்கள் ஒருவருக்கொருவர் மொழிகளைப் புரிந்து கொள்ளாவிட்டாலும், மற்றொரு சமூகத்தைச் சேர்ந்த பிள்ளையின் கையை மிகவும் இயல்பாகப் பிடிப்பீர்கள். நாம் வளர வளர அந்த நெருக்கத்தை வளர்க்க வேண்டும்".



ஹிரித்யா அருணவராசா ஆசிரியையாக தனக்கென ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தைப் பார்க்கிறார்.

செம்முகம் நிகழ்ச்சிக் குழு என்பது ஒரு இயக்கம், வழக்கமான அரசு சாரா அமைப்பு அல்ல என்று சத்தியசீலன் நம்புகிறார். "சமாதானம், சகவாழ்வு, பாலினம், சமத்துவம், சமூக நீதி என்ற ஒரு காரணத்திற்காக நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். தாகம் என்று நான் எழுதிய மிக சமீபத்திய கதைவசனம் சுற்றுச்சூழல் பிரச்சினையில் உள்ளது. இது தண்ணீரின் பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டது - கழிவுகள், சமத்துவமின்மை மற்றும் மக்கள் பாதிக்கப்படுவதைப் பற்றியதாகும்."

நிகழ்ச்சிகளில் பார்வையாளர்களின் பங்கேற்பு பொதுவாக உற்சாகமாக இருந்தாலும், மக்களிடமிருந்து வரும் பதில்கள் எப்போதும் நேர்மறையானதாக இல்லை. "சில சமயங்களில் நாடகம் நடத்தும் போது நாங்கள் கொஞ்சம் சிரமப்பட்டிருப்போம்," என்று சத்தியசீலன் குறிப்பிடுகிறார், "சிலர் அதை நாகரீகமாக ஒப்புக்கொண்டு முன்னேறுகிறார்கள். ஆனால் பார்வையாளர்களில் சிலருக்கு அவர்கள் கேட்க விரும்பும் கேள்விகள் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம், ஆனால் பின்வாங்கவும். பிறகு, "நாங்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், ஆனால் அவர்கள் இன்னும் எங்கள் நிலத்தை எங்களுக்குத் தரவில்லை. அப்படியானால் நாம் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? "என்று கொஞ்சம் முரண்படுபவர்கள் உள்ளனர்.

ஆனால் சத்தியசீலன் மிகவும் நேர்மறையானவர்: "சமாதானத்தை உணர்ந்து கொள்வதில் நான் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் உண்மையில் தெற்கில் உள்ள மக்களைப் புரிந்து கொள்ளவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆனால் நான் புரிந்து கொள்ள ஆரம்பித்துவிட்டேன். மற்றவர்களும் அப்படித்தான். எங்களின் கருத்துக்கள் எப்போதுமே அரசியலாலும் அதிகாரத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தன. அது மாற்றமடைகின்றது."

# அன்றாட ஜனநாயகத்தைப் புரிந்துகொள்ளல்

ஜனநாயகம் என்பது முக்கியமாக அரசியல் துறையில் அமைந்துள்ள ஒன்று என்று பொதுவாக மக்கள் நினைக்கிறார்கள். அவர்கள் தவறாக இருக்க முடியாது. ஜனநாயகம் என்பது எமது வீடுகளிலும் சமூகத்திலும், எமது பாடசாலைகளிலும், பணிபுரியும் சூழலிலும் பொருத்தமான ஒரு கருத்தாகும்;" என்கிறார் வவுனியாவைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியரும் ஆலோசகருமான 30 வயதான டாக்டர் அபிராமி சிவஞானம். "நானும் சமீபத்தில் பயிற்சியாளர்கள் செயலமர்வுப் பயிற்சியின் மூலம் இந்த நுண்ணறிவைப் பெற்றேன், மாற்றத்தை ஏற்படுத்த மக்களுடன் பணியாற்ற விரும்புவதால் நான் பங்குபற்றுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்."

முல்லைத்தீவு, மொனராகலை, வவுனியா, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத் (SCORE) திட்டத்தின் பங்காளி அமைப்புகளின் இருபத்தி இரண்டு உறுப்பினர்களுக்காக 2020 ஒகஸ்ட் மாதம் "அன்றாட ஜனநாயகத்தின் ஊடாக நிலைபெறும் சமூகங்கள்" என்ற தலைப்பிலான மூன்று நாள் செயலமர்வு நடைபெற்றது. பயிற்சியானது வயது வந்தோருக்கான கற்றல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஊடாடும் கருவிகள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தியது - கற்றலுக்கு உதவுவதற்கு வாழ்க்கை அனுபவத்தை வரைதல், ஜனநாயகத்தின் பல்வேறு அம்சங்களில் விளைதிறன் வாய்ந்த உரையாடலை எளிதாக்குதல் மற்றும் நிஜ வாழ்க்கை சூழ்நிலைகளுக்கு புதிய அறிவைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டதாகும்.



ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் "அன்றாட ஜனநாயகத்தின் ஊடாக நிலைபெறும் சமூகங்கள்" எனும் தலைப்பிலான பயிற்றுவிப்பாளர்களுக்கான மூன்று நாள் பயிலரங்கில் பங்கேற்றனர்



"இந்தச் செயலமர்வில் ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட ஒரு அற்புதமான பயிற்சித் தொகுதி பயன்படுத்தப்பட்டது, இது கற்றல் அனுபவத்தை மறக்கமுடியாததாக மாற்றியது என்று நான் கூற விரும்புகிறேன். இது வெளியிடப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்,"என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தன்னார்வ ஒருங்கிணைப்பாளரும் காப்புறுதி நிறுவனமொன்றின் கிளை முகாமையாளருமான 24 வயதான பால்ராஜ் தர்ஷன் குறிப்பிட்டார். "ஜனநாயகத்தின் கொள்கைகள் எவ்வாறு தவறாமல் மீறப்படுகின்றன என்பதையும், அதன் விளைவாக நம் நாட்டில் சமத்துவமின்மை எவ்வாறு அதிகமாக உள்ளது என்பதையும் நாங்கள் கலந்துரையாடினோம். பெரும்பாலான மக்களுக்கு புரியாத ஒன்றாக ஜனநாயகம் தொடரக்கூடாது - நான் கற்றுக்கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வரை நான் பொறுமையற்றவான இருந்தேன்".

மக்கள் ஜனநாயகத்தை எவ்வளவு அதிகமாக புரிந்து கொள்கிறார்களோ, அவ்வளவு அதிகமான சமத்துவமிக்க சமூகத்தை அவர்களால் உருவாக்க முடியும் என்கிறார் பால்ராஜ் தர்ஷன்

“தற்போதைய தலைப்புகளில் ஆரோக்கியமான கலந்துரையாடல்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்தோம். எங்களைப் பிரித்து சமத்துவமற்றவர்களாக மாற்றும் காரணிகளை நாங்கள் மூளைச்சலவை செய்தோம், ”என்று டாக்டர் சிவஞானம் குறிப்பிடுகிறார். “செயலமர்வு நிறைய பிரதிபலிப்பைத் தூண்டியது. எங்கள் வீடுகளில் ஜனநாயகமும் சமத்துவமும் இல்லை என்பதை நான் புரிந்துகொண்டேன். பாலின பாத்திரங்களை நாங்கள் ஆராய்ந்தபோது நான் அதை தெளிவாகக் கண்டேன். நான் நியாயமாக இருக்க விரும்புகிறேன். என் பிள்ளைகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அவர்களின் விருப்பங்களை நான் மட்டுப்படுத்தப் போவதில்லை. அவர்கள் நடனக் கலைஞர்களாகவோ அல்லது இசைக்கலைஞர்களாகவோ ஆக விரும்பினால், அதுவும் நல்லது. ஒவ்வொரு துறையும் மதிப்புமிக்கது.”



டாக்டர் அபிராமி சிவஞானம் ஜனநாயகம் வீட்டிலிருந்து தொடங்குவதை உறுதிப்படுத்த விரும்புகிறார்

தனிநபர்களின் தெரிவுகள் மற்றும் உரிமைகளுக்கான மரியாதை ஜனநாயக அமைப்பின் ஒரு பகுதியாகும். அன்றாட ஜனநாயகம் என்பது அவர்களின் அன்றாட வாழ்க்கையை வடிவமைக்கும் முறைசாரா மற்றும் முறையான குழுக்கள் மற்றும் நிறுவனங்களில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதாகும். இது பொது நன்மைக்கு பங்களிக்கும் வழிகளில் தனிப்பட்ட தெரிவுகளை மேற்கொள்ளும் நபர்களின் திறனைப் பற்றியது - அதே போல் இன்று சமூகம் எதிர்கொள்ளும் வளர்ந்து வரும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் மக்களின் கூட்டுத் திறனைப் பற்றியதாகும்.

செயலமர்வு ஜனநாயகத்தைப் புரிந்துகொள்வது மட்டுமல்லாமல், இந்த விஷயத்தில் கலந்துரையாடலை எவ்வாறு எளிதாக்குவது என்பதையும் கற்பித்தது. “நாம் வசதிப்படுத்துநர்களாக இருக்கும்போது, சில சவால்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். உங்களிடம் அறிவு இருக்கலாம், ஆனால் அதைப் பகிர்வது எப்பொழுதும் எளிதல்ல” என்கிறார் அம்பாறையிலிருந்து எஸ். எம்.இ்.பாம். “பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைகள் மிகவும் நன்றாக இருந்தன, எல்லோரும் ஆர்வமாகவும் ஈடுபாட்டுடனும் இருந்தனர். பங்கேற்பாளர்களின் கவனத்தையும் கற்பனையையும் எவ்வாறு கைப்பற்றுவது என்பதை நாங்கள் கற்றுக்கொண்டோம். எங்களுக்கு, இது வாழ்நாள் வாய்ப்பாக இருந்தது.” தொற்றுநோயுடன் தொடர்புடைய முடக்கங்கள் காரணமாக மாவட்டங்கள் முழுவதும் முக்கிய வசதியாளர்கள் பயணிக்க முடியாத சூழ்நிலையில், அடிமட்ட அளவிலான பயிற்சியை நடத்துவதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை பங்கேற்பாளர்கள் பெற வழிவகுப்பதில் இந்த செயலமர்வு கவனம் செலுத்தியது.

அடுத்து, 2021 ஏப்ரலில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 16 பிரதேச செயலகப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 40 மகளிர் சம்மேளன உறுப்பினர்களுக்கு, ‘அன்றாட ஜனநாயகத்தின் ஊடாக நிலைபெறும் சமூகங்கள்’ தொடர்பான செயலமர்வை SCORE நடத்தியது. ஜனநாயகத்தின் முக்கிய விழுமியங்களைப் பற்றிய பங்கேற்பாளர்களின் புரிதலை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும், இதன் மூலம் அவர்கள் சமூகத்துடன் ஒரு செயல்பாட்டில் கேட்பது, கருத்து வேறுபாடுகளில் செயற்றிறன் வாய்ந்த முறையில் ஈடுபடுவது மற்றும் செயலுக்கான முன்னுரிமைகளை அமைத்தல் ஆகிய விழுமியங்களைப் பற்றி கலந்துரையாட முடியும்.

இப்பயிற்சியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பெண்கள் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. சில வருடங்களுக்கு முன்னர், 2018 இல், பல வருடங்களாக பெண்கள் குழுக்களின் செயற்பாட்டிற்குப் பின்னர், இலங்கை அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பெண்களுக்கான கட்டாய 25% இட ஒதுக்கீட்டுடன் நடத்தியது. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் எண்ணிக்கை 100 க்கும் குறைவாக இருந்ததை ஏறக்குறைய 2000 வரை அதிகரித்தது. நாட்டில் அரசியல் என்பது ஒரு சம நிலை அல்ல - அது ஆண்களால் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை இது தெளிவாக ஒப்புக்கொண்டது. இருப்பினும், இந்த ஒதுக்கீடு என்பது அரசியலில் பெண்களின் பாதகமான நிலை மற்றும் ஜனநாயக செயல்முறைகளில் அவர்கள் ஓரங்கட்டப்படுதல் ஆகியவற்றை தீர்க்கும் முன்கூட்டிய நடவடிக்கையாகிய. இது தற்போதைய மற்றும் சாத்தியமான ஆண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பை உருவாக்கும் ஒரு தற்காலிக நடவடிக்கை என்பதை புரிந்து கொள்ளவில்லை.



அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஜனநாயகத்தின் முக்கிய அம்சம் என்பதை பெண்கள் கலந்துரையாடினர்



சிவராசா மரிய ரோசரி தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராவார். "பெண்கள் அரசியலுக்கு வருவது முக்கியம் என்று நான் நம்புகிறேன். உள்ளூராட்சி அரசாங்கத்தில் பெண்களுக்கு 25% இடஒதுக்கீடு உள்ளது, ஆனால் இந்த நாட்டின் மக்கள்தொகையில் 50% க்கும் அதிகமான பெண்கள் உள்ளனர்," என்று அவர் கூறுகிறார். "பயிற்சி மூலம் நாங்கள் கற்றுக்கொண்டது நமது சமூகத்திற்கு அவசியம் என்று நான் நம்புகிறேன். ஜனநாயகம் என்றால் என்ன, ஜனநாயகத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் நாம் எப்படி இணைந்து வாழ முடியும் என்பது பலருக்குப் புரியவில்லை. ஜனநாயகத்தின் கொள்கைகளின் அடிப்படையில் எங்கள் குழு எங்கள் சமூகத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதை நாங்கள் கற்றுக்கொண்டோம். ஜனநாயகக் கோட்பாடுகள் மீறப்படுவதைக் காணும்போது, சமூக உறுப்பினர்களாகிய நாம் எவ்வாறு குரல் எழுப்ப வேண்டும் என்பதையும் நாங்கள் கலந்துரையாடினோம். இது பெண் அரசியல் பிரதிநிதிகளுக்கும் மிகவும் மதிப்புமிக்க ஒரு ஆக்கப்பூர்வமான செயலமர்வாக இருந்தது. நான் அரசியலில் முன்னேறி, மாகாண மட்டத்திற்குச் சென்று தேசிய மட்டத்திற்குச் செல்ல விரும்புகிறேன். இது ஒரு நல்ல அடித்தளம், அதற்கான நல்ல ஆயத்தமாகும்" என்று கூறினார்.

அரசியலில் முன்னேற விரும்பும் பெண்களுக்கு ஜனநாயகம் மற்றும் ஜனநாயகக் கோட்பாடுகள் பற்றிய நல்ல புரிதல் அவசியம் என சிவராசா மரியா ரோசரி தெரிவித்துள்ளார்.

"எனக்கு அரசியலில் அவ்வளவாக ஆர்வம் இல்லை" என்று சுமதி வசந்தன் கூறுகிறார், "ஆனால் இந்தச் சமூகத்தில் வாழும் மக்களாகிய நாம் ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்தி சமத்துவமின்மையை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. பழமைவாத சிந்தனையை எதிர்த்துப் போராடுவது போன்ற பல சிக்கல்களைச் செயல்பாட்டில் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் அதை நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு சவாலாக இருக்கிறது."



உள்ளூராட்சி மன்றத்திற்கு அண்மையில் தெரிவு செய்யப்பட்ட சுஜீவா ஜெயராமசர்மா, அரசியலுடன் சிறந்து விளங்கக்கூடியவர்: "ஜனநாயகம் என்பது மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலான ஒரு ஆளும் செயல்முறையாகவே நான் எப்போதும் அறிந்திருக்கிறேன்," என்று அவர் கூறுகிறார். "ஜனநாயகம் ஒரு பரந்த, ஆழமான அர்த்தம் கொண்டது என்பதை இப்போதுதான் நான் அறிவேன். சாதிக்க இன்னும் நிறைய இருக்கிறது, நாம் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே அது சாத்தியம் என்பதும் எனக்கு தெரியும். தற்போது பெண் அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு போதிய நம்பிக்கை இல்லை. ஆனால் நாங்கள் நம்மீது நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோம், எனவே இது மாறும் என்று எனக்குத் தெரியும்."

ஒரு அரசியல்வாதியாக இருந்தாலும், திருமதி ஜெயராமசர்மா "அரசியல் கட்சி அமைப்பும் அரசியல்வாதிகளும் உண்மையான ஜனநாயகத்தை அடைவதற்கு மிகப்பெரிய தடைகள். நாங்கள் கிராமத்திற்கு முக்கியமான ஒன்றைச் செய்ய முயற்சிக்கிறோம், அவர்கள் நன்மதிப்பைப் பெறத் திரும்புகிறார்கள். அவர்கள் பிளவுகளை உருவாக்குகிறார்கள், அவர்களின் நடத்தை மற்றும் அவர்கள் தங்கள் செல்வாக்கைச் செலுத்தும் விதம் மற்றும் அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தும் விதம் சமூகத்தை குழப்பத்திற்கு இட்டுச் செல்கின்றன. அது மாற வேண்டும்." என்பதை ஒப்புக்கொள்கிறார்.

ஜனநாயகத்திற்கு உள்ள தடைகளை நிவர்த்தி செய்வதற்குப் பெண்கள் தங்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சுஜீவா ஜெயராமசர்மா நம்புகிறார்

தற்போதுள்ள சமூக மனப்பான்மை மற்றும் பாகுபாடுகள் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் எவ்வாறு தடையாக இருக்கிறது என்பதைப் பற்றி செயலமர்வில் பங்கேற்பாளர்கள் பேசுகின்றனர். இருப்பினும், அவர்கள் சவால்களை சமாளிக்க திட்டமிட்டுள்ளனர். "ஜனநாயக சமூகத்தை நிறுவுவதற்கு பெண்களை அரசியலில் சேர்ப்பது முக்கியமானது" என்கிறார் சந்திரவதனி கந்தராசா. "சிறிய சமூக அமைப்புகள் உட்பட ஜனநாயக விழுமியங்கள் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்,. நான் ஒரு தாய், இந்த விழுமியங்களை நம் பிள்ளைகளுடன் மிகச்சிறிய வயதிலிருந்தே பகிர்ந்துகொள்வது, நமது சமூகத்தை உண்மையான ஜனநாயகமாக மாற்றுவதற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நான் உணர்கிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பணியில் சேவை வழங்குவதில் சமத்துவம்

சேவை வழங்குவதில் பாரபட்சம் காட்டுவதாக குற்றச்சாட்டுகளுடன் நீங்கள் ஒரு அரசாங்க அதிகாரியை எதிர்கொண்டால், எதிர்விளைவுகளும் மோதலாகவும் - மற்றும் பலனளிக்காததாகவும் இருக்கும். ஆனால், பாரபட்சமில்லாத வாடிக்கையாளர் சேவை வழங்கல் குறித்து, அரசு அதிகாரிகளுடன் இணைந்து 'கலந்துரையாடல்' மேற்கொண்டு சிறிது நேரம் செலவழித்தால், விளைவு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்.

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் (SCORE) திட்டம் எட்டு மாவட்டங்களில் உள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு 'பாகுபாடற்ற வாடிக்கையாளர் சேவை" பற்றிய பதினேழு செயலமர்வுகள் மூலம் சாதிக்க முயன்றது இதுதான். தேசிய சமாதானப் பேரவை (NPC) உருவாக்கிய பயிற்சித் தொகுதியானது, பெறுநர்களின் பார்வையில் இருந்து சேவை வழங்குவதில் உள்ள பாகுபாடுகளின் அடிப்படைக் கதைகளை வெளிப்படுத்திய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டது. நல்லிணக்க வேலைத்திட்டங்களை வலுப்படுத்துவதற்கான அன்றாட சமாதானக் குறிகாட்டிகள்" என்ற ஆய்வு - ஐக்கிய அமெரிக்காவின் அமைதிக்கான நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டது மற்றும் இலங்கையில் சமூக விஞ்ஞானிகளின் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது பல SCORE செயல்பாடுகளுக்கான நோக்கங்களை அமைப்பதற்கு வழிகாட்டியது.


அம்பாறை பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தரான 46 வயதான திருமதி சித்திரலதா கூறுகையில், "நாங்கள் பொதுவாக எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றுவதாக நாங்கள் நினைக்கின்றோம், ஆனால் இது தொடர்பில் நாம் தொடர்ந்து சிந்திப்பதில்லை. மூன்று பிள்ளைகளின் தாயான இவர், 2003 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்று அரச சேவையில் இணைந்தார். "எங்களிடம் ஒருபோதும் விடயத்தில் கவனம் செலுத்தும் நிகழ்ச்சி இருந்ததில்லை மற்றும் அதற்குரிய தேவையையும் உணர்ந்ததில்லை. ஆனால், இது அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொருத்தமானது என்பதை இப்போது நான் காண்கிறேன், மக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்வதை நாம் அடிக்கடி நினைவுபடுத்த வேண்டும்."





பங்கேற்பாளர்களை சுயவிமர்சனம் செய்துகொள்ள இந்தப் செயலமர்வு தூண்டியது என்கிறார் திருமதி சித்திரலதா.

பாரபட்சமற்ற சேவை வழங்கலின் நோக்கத்தை அடைய உருவாக்கப்பட்ட மாற்றக் கோட்பாடு, செயலமர்வுகள் மூலம் எதிர்பார்க்கப்படும் மாற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சேவை வழங்கலில் உள்ள பாகுபாட்டை நிவர்த்தி செய்வதில் தேவைப்படும் தொடர்ச்சியான ஈடுபாட்டை இது குறிக்கிறது.




பயிற்சி தொகுதி இரண்டு நாட்களில் மூன்று-படிமுறை அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. முதல் படிமுறை, ஆராய்ச்சி ஆய்வுகளின் கதைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் மூலம் பாகுபாடு பற்றிய உணர்வை அடையாளம் காண பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுகிறது. இது பாகுபாடு நிகழக்கூடிய பல்வேறு வழிகளை ஆராய்கிறது - சேவை வழங்கலில் இன மற்றும் மத பாகுபாடு பற்றிய உணர்வுகளில் கவனம் செலுத்துதல் மற்றும் பாலினம் மற்றும் இயலாமை தொடர்பான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பாகுபாடு நடைமுறைகளை ஆய்வு செய்தல் ஆகும்.

பங்கேற்பாளர்கள் இலங்கையில் பாகுபாடு உணரக்கூடிய ஐந்து துறைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார்கள், மேலும் நீதி, பொலிஸ், சுகாதாரம், பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி ஆகிய ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய நிஜ வாழ்க்கை கதைகள்: இதைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களை ஈடுபடுத்தும் உரையாடல், இலங்கையில் சேவை வழங்கலில் பாகுபாடு எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பது பற்றிய உரையாடல். மேலும் சமமான சேவை வழங்கலின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் பல முக்கிய கொள்கைகள், உதாரணமாக, அலுவல் மொழிச் சட்டம் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகியவை சுருக்கமாக கலந்துரையாடப்படுகின்றன.

இரண்டாவது படிமுறையானது, பொதுமக்களின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு உணர்திறன் மற்றும் அவர்களிடையே பாகுபாடு காட்டாத தரமான சேவையை வழங்குவதில் சிறந்த நடைமுறைகள் பற்றிய அனுபவங்கள் மற்றும் கற்றல்களைப் பகிர்ந்து கொள்வது ஆகும். பங்கேற்பாளர்கள் தாங்கள் பயிற்சி செய்ய விரும்பும் பல்வேறு வகையான பாகுபாடுகளை ஒப்புக் கொள்ளத் தூண்டும் செயல்முறை இதுவாகும். கவனம் இரண்டு மடங்கு ஆகும் - நிறுவன படிநிலை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன சார்புகள் இரண்டையும் ஆய்வு செய்தல் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தின் செயல்பாடுகளிலும் ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் பெறுநர்களுடன் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதில் வெளிப்படுத்தப்படும் தனிப்பட்ட சார்புகள். பங்கேற்பாளர்கள் தனிப்பட்ட பிரதிபலிப்பில் சிறிது நேரம் செலவழித்து, சேவை வழங்குநர்களாக, அவர்கள் ஒரு சார்புடைய முறையில் செயல்பட்டிருக்கக்கூடிய ஒரு சம்பவத்தை விவரிக்கிறார்கள். பங்கேற்பாளர்கள், சேவை வழங்குநர்களாக தங்கள் பாத்திரங்களில் அவர்கள் அனுபவித்த சம்பவங்களுக்கு மாற்று பதில்களைப் பற்றி விவாதிக்க ஒருவருக்கொருவர் உதவ இந்த படிமுறை ஒரு இடத்தைத் திறக்கிறது.

“அறிவை வழங்குவதற்கும், நமது சிந்தனை முறைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான செயல்பாடுகளை நான் விரும்பினேன். இது மிகவும் ஈர்க்கக்கூடிய முயற்சியாக நான் கருதுகின்றேன்,““ என்கிறார் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ.சனோபர். “விடயக்கலை ஆய்வுகளில் நான் அதிக மதிப்பைக் கண்டேன், அவை தொடர்புபடுத்தக்கூடியவை

மற்றும் பரந்த விடயத்தைப் புரிந்துகொள்ள எனக்கு உதவியது. இந்த செயலமர்வானது இரண்டு நாட்கள் என்ற குறுகிய காலத்திற்குள் அணுகுமுறைகளை மாற்றியது" என்று பிரதேச செயலகத்தின் மற்றுமொரு ஊழியராகிய எம்.எஸ். பாத்திமா கூறினார்.

மூன்றாவது கட்டத்தில், பங்கேற்பாளர்கள் முந்தைய அமர்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்ட பாரபட்சமான நடைமுறைகளைச் சரிசெய்வதற்கான வழிகளை மூளைச்சலவை செய்கின்றனர். கலாச்சார காரணிகள் பாலினம்/சாதி/வர்க்க அடிப்படையில் நடாத்தப்படுதல்) மற்றும் நிர்வாக குறைபாடுகள் (மொழி மற்றும் தகவல் தொடர்பு சிக்கல்கள், சேவைகளை அணுகுவதற்கான எளிய மற்றும் எளிதான பாதைகள் இல்லாமை, பணியிடத்தில் உள்ள படிநிலைகள்) ஆகியவற்றின் அடிப்படையில் இந்த தீர்வுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம் என்பதை அவர்கள் விவாதிக்கின்றனர். சிக்கல்கள் மற்றும் சார்புகள் கண்டறியப்படுகின்றன - மேலும் தீர்வுகள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தீர்வுகள் என வகைப்படுத்தப்படுகின்றன. பங்கேற்பாளர்கள் சேவை வழங்குநர்கள் என தங்களுக்கான குறிப்பிட்ட தரிசனங்களை வரையறுத்துக்கொள்ளவும், தங்கள் வாழ்க்கையில் பாரபட்சமின்றி அடையக்கூடிய இலக்குகளை வரையறுக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

"நான் பணிபுரியும் பகுதியில் மூவினத்தவர்களும் வாழ்கின்றனர். சகவாழ்வும் நல்லிணக்கமும் அனைவரின் நல்வாழ்வுக்கும் முக்கியம்" என்கிறார் அம்பாறை நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 39 வயதுடைய தெகுணராசா தயாளராஜ், "இவ்வாறு நடக்கிறது என்பதை நாம் அறியாமலேயே பல பாரபட்சமான செயற்பாடுகள் நடைபெறுவதை நான் உணர்ந்தேன். பயிற்சியின் முக்கிய விஷயம் என்னவென்றால், நாங்கள் என்ன செய்கிறோம் என்பதும் அது தவறு என்பதும் எங்களுக்குத் தெரிந்தது. பாகுபாடு என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்வதில் இது ஒரு நல்ல பயிற்சியாகும்."

"எனது மிக முக்கியமான கற்றல், பணம் அல்லது செல்வாக்கு இல்லாதவர்களை விட நம்மிடம் வரும் அதிக சலுகை மற்றும் சக்திவாய்ந்த நபர்களை நாம் சிறப்பாக நடத்தக்கூடாது என்பதுதான்" என்கிறார் அம்பாறை, எரகம பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தராகிய 36 வயதாகிய எஸ்.எம். வஹாப். "நாங்கள் செய்யும் வேலையைப் பற்றி நாங்கள் தீவிரமாக சிந்திக்கத் தொடங்குவது இதுவே முதல் முறை. நாங்கள் செயலமர்வை முடித்த பிறகு, எங்களில் சிலர் ஒரு குழுவாக உருவாகி, சிக்கலைத் தீர்க்க ஒரு குழுவாக பணியாற்றத் தொடங்கினோம்".




எஸ்.எம். வஹாப் பாரபட்சமற்ற சேவை வழங்கல் பகுதியில் தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறார்

நாங்கள் பயன்படுத்திய பயிற்சித் தொகுதியானது, ஒரு தீவிரமான சிக்கலைத் தீர்ப்பதற்கு உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை எடுத்த வினைத்திறன் வாய்ந்ததாகும். முதலில், பாரபட்சம் இருப்பதை ஏற்க அவர்கள் விரும்பவில்லை என்று அதிகாரிகள் என்னிடம் சொன்னார்கள். ஆனால் எங்கள் குறைபாடுகளை நாங்கள் மனமுவந்து ஒப்புக் கொள்ளும் விதத்தில் பயிற்சி எளிமையானதாக இருந்தது," என்கிறார் தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட திட்ட அதிகாரியாகிய ஞானவெளிச்சம் வொட்கின்சன். "கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேச செயலகங்கள் அதிக பயிற்சி செயலமர்வுகளை விரும்புகின்றன, எனவே நாங்கள் இன்னும் ஐந்து செயலமர்வுகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்" என்று மேலும் குறிப்பிட்டார்.

"பயிற்சியின் முடிவில் நான் ஒரு மகிழ்ச்சியை உணர்கின்றேன்" என்கிறார் தெகுராசா தயாளராஜ்". எனது அறிவை, எனது புரிதலை நான் ஒருவருடன் பகிர்ந்து கொண்டால், பின்னர் அவர் அதை வேறொருவருடன் பகிர்ந்து கொண்டால்... பாகுபாடு இல்லாத சேவையை பொதுமக்களுக்கு வழங்க முடியும். நாங்கள் அனைவரையும் சமமாக நடத்துவது மட்டுமல்லாமல், அனைவரையும் நன்றாக நடத்த வேண்டும் என்பதையும் நான் உணர்கிறேன், அதனால் அவர்கள் எங்கள் சேவைகளுக்காக எங்களை அணுகும்போது அவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாவதில்லை" என்றும் கூறினார்.

"ஒவ்வொரு மாதமும், செயலகத்தில் ஒரு நாள் கலந்துரையாடல் நடத்துகிறோம் என்கிறார் திருமதி சித்திரலதா. "நாங்கள் பெற்ற அறிவையும் புரிதலையும் பகிர்ந்து கொள்ள அந்த நேரத்தைப் பயன்படுத்துவோம். அதிகாரிகள் பொதுமக்களை சிறப்பாக நடத்த வேண்டும் என்பதையும், அதிகாரிகள் அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதையும்

பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கிராம அளவிலான அதிகாரிகளுக்கும் இது மிகவும் முக்கியமானது. அவர்களுக்கென பிரத்தியேகமாக ஒரு செயலமர்வு நடத்தப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்".

தேசிய சமாதானப் பேரவையின் (NPC) இன் SCORE செயல்பாடுகளின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஒருங்கிணைப்பாளர் நுவனி விஷாகா, "நாங்கள் உருவாக்க விரும்பிய மனப்பான்மை மாற்றம் எங்கள் கண் முன்னே நடப்பதைக் காண முடிந்தது. ஆனால் இது நாம் தொடர்ந்து மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகளுக்கு நீடிக்க வேண்டிய ஒரு செயல்முறையாகும், அவர்களில் சிலர் அரசியல் சித்தாந்தம் மற்றும் கட்சி சார்பின் அடிப்படையிலான பாகுபாடு நடைபெறுகிறது என்பதை எங்களுக்கு ஒப்புக்கொண்டனர். பாலினம், இனம் அல்லது வேறு ஏதேனும் காரணிகளின் அடிப்படையில் பொது சேவையில் பாகுபாடு காட்டுவது, நாட்டில் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கு தடையாக இருக்கும். அதற்காகவே நாம் போராட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

வெளியீடு

**இலங்கை தேசிய சமாதான பேரவை**

12 ஃ14, புராண விகாரை வீதி, கொழும்பு 06

தொலைபேசி : +94 11 2818344, 2854127, 2809348

தொலைநகல் : +94 11 2819064

மின்னஞ்சல் : npc@sltnet.lk

www.peace-srilanka.org

ISBN 978-624-5900-07-7

9 786245 900077

printed & design by designwaves.lk